உ

சிவமயம்



பணிப்புலம்

முத்துமாரியம்மன்

# ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேக

# வெளியீட்டு மலர்

# “சக்தி வழிபாடு”

சௌமிய ஆண்டு பங்குனித் திங்கள் 12ஆம் நாள்

உ

சிவமயம்

## பணிப்புலம் முத்துமாரி அம்மன்

## ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேக

## வெளியீட்டு மலர்

★

# சக்தி வழிபாடு

சௌமிய ஆண்டு பங்குனித்திங்கள் 12ஆம் நாள்

விலை ரூபா 1-50

# நூன்முகம்

பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை
பாதத்திறம் பாடுவோம்.

அண்ட சராசரங்கள் அனைவற்றையும் ஆட்டி அசைப்பது சக்தி. அச்சக்தியின் உருவமும் அருவமும் ஆனவள் பராசக்தி. மின்பொறிக்கருவியை அழுத்தியவுடன் இயங்குகிறது. நிறுத்தியவுடன் நின்றுவிடுகிறது. இயங்கும்போது இதுதான் இயங்கச் செய்யும் மின்சாரம் - காந்தம் என எங்கள் கண்களால் காணவோ, தொட்டறியவோ முடிவதில்லை. எமக்குப் பெயர் சொல்லும் நாமே, எம்மை, இது தான் - இவ்விடந்தான் நாமெனத் தொட்டுக்காட்ட முடிவதில்லையே. எம்மையும், மின்பொறி மின்சாரத்தையுமே எங்களாற் காட்ட முடியவில்லை.

உடம்பெல்லாம் பசுவின் பால் நிறைந்திருக்கிறது. ஆனால் தொட்ட விடமெல்லாம் கண்ணுக்குத் தெரிவதில்லைப் பால். இவ்வாறே அன்னை பராசக்தியும் அண்டமெலாம் நிறைந்திருக்கிறாள். உடம்பெல்லாம் நிறைந்த பசுவின் பாலை அதன் மடியிற் பெறுகிறோம்; அஃதேபோல் அண்டமெல்லாம் நிறைந்த அன்னை பராசக்தியை நாம் கோயிலில் காண்கிறோம் உருவடிவில்.

சூரியனை - சந்திரனை - நட்சத்திரக் கூட்டங்களை - அண்டங்களையெல்லாம் இன்னபடி வா எனக் கிரமம் தப்பாமல் அசையும்படி தன் சுட்டுவிரலில் வைத்து வேடிக்கை காட்டுபவள் சக்தி. அச்சக்தி சிவத்தின் பாதி, சிவம் மோனநிலையில் உலக உயிர்களின் சேமத்திற்காக நிட்டையில் அமர்ந்துவிடுகிறது, ஆகவே எல்லாம் நடத்துபவள் அச்சக்தி,

நாம் ஐம்புலன்களால் - மும்மலங்களால், பாச பந்தங்களால் கட்டுண்டு கிடக்கின்றோம். மனிதன் நான், எனது என்னும் செருக்கால் பிறவியாகிய கடலைப் பெருக்க முற்படுகின்றான். பலபல துன்பங்களுக் காளாகிறான். தனக்கும், சிவத்துக்கும், சிவமாகிய சக்திக்கும் இடையே இருள்த் திரையைத் தடிப்பாக்கிக் கொண்டிருக்கின்றான்.

தாய் சொல்லுக்கடங்காச் சிறு பையனை — தான் செய்யவேண்டுமென்பதற்கடம் பிடித்த பையனைத், தாய் தடுக்க முடியாமல் கை தளர்த்தி விடுகிறாள். அவன் ஓடி விழுந்து மண்டை உடைந்து வேதனை தாங்காது ''அம்மா'' என்கிறான். அதனைத் தாங்காது விரைந்து அலறிப் புடைத்துக்கொண்டு தாய்விரைந்து கண்ணீர் வடித்து கண்ணீர் துடைத்து ஆவன ஓடிஓடிச் செய்கிறாள். இது நாம் - கண்ணால் உலகில் கண்டுருகும் காட்சி. இவ்வாறே நாமும் பாச அலைப்பால், செருக்கால்

சக்தியின் அருள் திறத்தை மறந்து நான் என்னும் செருக்கால்' உலகபந்தத்தில் மூழ்கி எற்றுண்டு தாங்கமுடியாமல் அம்மா, அப்பா எனும் முதல் வார்த்தையை உச்சரிக்கின்றோம். கோயிலை வலம் வருகின்றோம். அப்போது எம்மன்னை பராசக்தி தோன்றாத் துணையா யிருந்து நமக்கு உறுதுணையாகிறாள் நம்மையெல்லாம் ஓடுமட்டும் ஓடவிட்டு, வாடிவதங்க விட்டு இளைத்துக் களைத்தவேளை, எந்தெந்த இடமோ அந்தந்த இடமெலாம் என்னென்ன, வடிவிலோ, நம்மை வந்து தன் இறக்கையுள் அணைத்து ஆறுதலும், அமைதியும் தரு கிறாள். அவள் எங்கெல்லாம் கோயில் கொண்டிருக்கிறாளோ அங் கெல்லாம் தம்மை வழிபடும் அன்பர்க்கு ''அம்மா'' என அழைக்கும் குழந்தைகட்கு மாறாக்காதலுடன் ஆறுதல் அளிக்கிறாள் எம்மன்னை.

ஆண்டவனை வேண்டி ஓலமிட்ட அடியவர் எல்லாரும் தாம் கூப் பிடும் வேளையிலும், பாடும் வேளையிலும் அம்மையை முன்னும். அப்பாவைப் பின்னும் அழைத்து வேண்டுவதிலிருந்தே அன்னை மகா மாரி — பராசக்தி உயிர்களுக்கு — வேண்டுவார்களுக்கு எவ்வளவு விரைவிற் துணைசெய்ய வந்துவிடுவாள் என்பதனைச் சொல்லாமற் சொல்லி வைக்கிறார்கள்.

அன்னையின் அருளாலே அவள் அருள் திறம் கண்டு அவ்வழியில் நம்மையும் வழிப்படுத்த வருந்தியழைக்கிறார்கள் அருட்பாடல் பாடிய அடியார்கள். அவர் தம் பாடல்கள் நம்பிறவிப் பிணிக்கு மருந்து போல்வன. நம்மையோட விட்டு, விளையாடவிட்டு இளைத்தபோது பேதித்து — மாயையில் இருந்து விடுவித்து நம்மை வளர்த்தெடுக்கும் பெய்வளை அவள். அவள் ஞானசம்பந்தக் குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டிப் பாடவைத்தாள், அவுணர் செய் துன்பந்தாங்காத தேவர் கட்கு துயர்தீர்த்து நமக்குமே பாதுகாப்புச் சட்டை போல்வதான சக்திக் கவசம் பாடவைத்தாள். அக்கவசம் பாடுவோர்க்கு துயர் துடைத்து சுகானுபவமெல்லாம் குறைவின்றித் தரவல்லது.

அவள் அருமை விரிக்கிற் பெருகும். ஒருநாள்; திருக்கடவூர் ஆலயச்சந்நிதி. தஞ்சை மன்னன் சரபோசி ஆலயத்துக்கு வருகிறான். ஆலய வாசலில் சந்நிதியை நோக்கியபடி மனம் உருகி மெய் உருகித் தன்னை மறந்தநிலையில், அன்னை பராசக்தியை நோக்கியபடி அபிராமி பட்டர் நிற்கின்றார். தஞ்சை மன்னனுக்குப் பட்டரோடு பேச ஆசை. எனவே பட்டர் பக்கம் திரும்பி, ''பட்டரே, இன்று அமாவா சைத்திதி எத்தனை நாழிகைக்குக் கூடும்'' என்றான். பட்டர் பரா சக்தியின் நினைப்பில் - பிரகாசத்தில் – சோதியில் தன்னை மறந்து ''இன்று பூரணை'' என்றார். பக்கத்து நின்றோரெல்லாம் கொல்லென்று நகைத்தனர். பைத்தியம் பட்டருக்கென்றனர். அரசனுக்கும் இடர்ப் பாடு. எனவே ஏற்பட்ட கேலியால் பராசக்தியின் பக்திப் பிடியிலி ருந்து விடுபட்டுத் திரும்பிய பட்டருக்குத் தவறு புரிந்துவிடுகிறது. உடனே சக்தியின்மீது பாடல்கள் அடுக்கடுக்காக அந்தம் ஆதியாய்த்

தொடுத்துவிடுகிறார்; கண்ணீர் மாலை மாலையாக விட்டபடி, சக்தி பாடலுக்குச் சிரக்கம்பம் செய்து சிரித்தபடி இருந்தாள். பட்டராற் றுங்கமுடியவில்லை. ''விழிக்கே அருளுண்டு'' என்ற 79ஆம் பாடலைத் தாங்க முடியாதுபாடிய போக்கில் பாட்டுக்குத் தாளமிட்ட பராசக்தி திடுக் கிட்டு உடனே தன்காதுத் தோடொன்றை எடுத்து வானவீதியில் விட்டெறிந்தாள். அமாவாசையன்று பூரணை நிலாப் பிரகாசித்தது: அரசன் தொடக்கம் அத்தனை பேரும் அவரிடம் மன்னிப்புக்கோரி வலம்வந்தனர்.

இப்புதுமை அளித்தது அபிராமி அந்தாதி இதைப் பாடுவோர் அவளருளுக்குட்படுவர். என்பதைச் சொல்லவும் வேண்டுமோ: வா வென்றழைத்தால் வாராதிருப்பாளோ நம்மன்னை. கன்றினை இழந்த பசுவின் நிலையில் நம்மைக் காப்பாற்றுவாளவள். சுவை தரும் பட் டர் பாடல்களை நாம் பக்தியோடு பாட நம்பருவரல் துடைப்பாள் பராசக்தி.

குறிஞ்சிவாழ் மக்கள் அதிகாலை எழுந்து அங்கயற் கண்ணம்மை காலில் விழுவர். அவர் கணவரும் பழச்சாறும் தேனுமுண்டு வெறி யாட்டயரும் பக்தி வலையில் படுமாறுபோல், நம்மையெல்லாம் பக்தி முறுக்கேற்றி, பைத்தியக்கார நிலையிலாக்கி, உருவேற்றித் திருவேற் றும் பெற்றி வாய்ந்தது கர்ண பரம்பரையாகவே பாடிவரும் மாரி யம்மன் தாலாட்டு, அது பாடுவாரை மெய்மறக்கச் செய்யும், அம் மையே நம்முன்னே ஓடிவந்து வேண்டுவதெல்லாம் கூறும் நிலையை யேற்படுத்துமது: இதனைப் பாடி வழிபட நம் துன்பம் பறந்தோடும்.

அடுத்து, நாம் பராசக்தியின் அருள் வெளிப்பாடு - நாமாவளி நமது வேண்டுகோளை அன்னையை யேற்கச்செய்து நம்மை நற்பேற் றுக்கு வழிநடத்த வல்லது. சிந்தனையில் பூசிக்கச் சிறந்த அருமருந்து:

அம்மையை நம்முன் வழிப்படுத்த நமக்கு வழிசெய்வன உமை யம்மைபேரில் அடியார் பலரும் மனமுருகி, மெய்யுருகிப் பாடிய அருள் பெற்ற அருட்பாக்கள் வரிசை நாம் மனனம்செய்து அம் மையை வேண்டுதற்கு அரியவை. அவையும் நம்மை அம்மையினரு ளுக்கு வழிசெய்யும். பலநூல்களிலிருந்த அவை பொறுக்குமணிகள்.

இவற்றை அடுத்து நம்மூர்க்கே யுரித்தான பணிப்புலம் முத்துமாரி யம்மன்தோத்திரம் நம் குலதெய்வத்துக்கு,கோயிலின் புனருத்தாரண வேலையில், அளவை சக்தி உபாசகர் அருட்கவி விநாசித்தம்பி அவர் கள் ஆக்கித்தர நாம் சேர்த்தவை. நம்மன்னைபேரில் நாம் உருக்கமு டன் பாட உகந்தவை. இவற்றின் எப்பகுதியையாவது நாம் மனனம் செய்து பாடி வழிபட்டால் நம் எல்லா வினைகளும் பலிதமாகி துன் பம் நீங்கி, இன்பம் பெருகி ஈற்றில் முத்தியின்பத்தையும் தரும்.

பணிப்புலம்
முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

# அணிந்துரை

வித்தியாரத்தினம் நவாலியூர் சோ. நடராசன் அவர்கள்

வடமொழிச் சிவஞானபோதத்தின் பதினோராவது சூத்திரத்திலே கடைசி மகாவாக்கியம் "தஸ்மாத் பராம் பக்திம் குர்யாத் ஆத்மோ பகாரகே" — என்பது இதன் பொருள், "ஆதலால், ஆன்மாவுக்கு உபகாரியாயிருக்கும் பரம்பொருளிடம் உயர்ந்த அன்பைச் செலுத்துக" என்பதாகும். பக்தி என்பது இடைவிடாத பற்று. ஒன்றித்த நினைவு. மறப்பற நினைத்தல்; வேறு நினைவின்றி அதே நினைவாயிருத்தல்; இதைப் 'பூரண சரணாகதி' என்பர் வைணவசம்பிரதாயிகள். நிறைகுடத்தைத் தலையிலே தாங்கிக்கொண்டு நடக்கும் பெண்ணுடைய சிந்தையிலே எத்தனை சித்தவிருத்திகள் பரந்தாலும், குடத்திலே எப்பொழுதும் கவனம் இருப்பதுபோலவே, எண்ணற்ற உலக வியாபாரங்களில் ஈடுபட்டிருக்கும் போதும் விடுதலைநாட்டமுள்ளவன் மனத்திலே பரம்பொருளின் பற்றுத்தானறியாதே தனக்குளிருந்து கொண்டிருக்குமென்கிறார் அனுமுதிச் சக்கரவர்த்தியான ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர். "இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க" என்றார் பாண்டிநாட்டின் முன்னை நாள் முதல்மந்திரியா யிருந்துகொண்டே சாயுச்சிய நிலைபெற்ற சீவன் முத்தர் மாணிக்கவாசகர் பக்திக்கு இலக்கணங் கூறிய சங்கரபகவத்பாத பூச்சியர் பல உவமைகளைக் கூறிக் காந்தங்கண்ட ஊசியைக் குறிப்பிடுகிறார்.

இந்தப் பற்று இயல்பாகவே உண்டாகவேண்டுமென்பது குறிப்பு; பழக்கத்திலே வருவதுதான் மனிதர்க்கு இயல்பாகும். தனக்கு உபகாரியானவரிடத்துப் பற்றுக்கொள்க என்று சிவஞானபோதங் பதினோராவது சூத்திரக் கடைசியில் கூறியமை தமிழ்ச் சிவஞானபோதத்திலே அயரா அன்பின் அரன்கழல் செலுமே என்ற திருவாக்காக மலர்ந்திருக்கிறது. அயரா அன்பு மறப்பு, ஓய்வு, அலைக்கழிவு இல்லாத பற்று, பற்று மனத்திலே பதியவைத்தல்;

> *"காணக் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்*
> *காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்*
> *அயரா அன்பின் அரன்கழல் செலுமே"*

கண் உயிர் உடம்பிலிருப்பதால் காண்கிறது. உயிரில்லாவிட்டால் கண்ணுக்கு உயிர்ப்பாகிய பார்வையில்லை; அதுபோல உயிர்க்கு அறிவாகியுள்ளது பரம்பொருள்; அஃது ஒரு சக்தி; உயிர்க்குபிரான சக்தி; அங்

தச் சக்தி இல்லாவிட்டால் உயிர்கூடப் பிணந்தான். அறிவு, இச்சை, செயல் இன்றி வாளாகிடக்கும். உயிருக்கு உயிர்ப்பைக் கொடுக்கும் சக்திக்குப் பாற்பாகுபாடு மனிதரால் விளங்குவதற்காகக் கொள்ளப்பட்டது. குணங்குறியற்றதற்குக் குணங்குறியேற்றுவது மனிதருடைய வசதிக்காகவே விளங்காததை விளங்குவதற்கு ஒரு வாய்ப்பாடுண்டாக்குவதற்காகவே. அஃது ஒரு தலைக்கீடு. குறிப்பு; வியஞ்சனம். லிங்கமென்றே கூறிவிடலாம்.

> *''பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத்*
> *தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்''*

ஒருபக்கம் பெண்வடிவாயிற்று; அவ்வடிவுதான் தன்னுள்ளே ஒடுக்கி மறைக்கினும் மறைக்கப்படும். அப்போது எல்லாக் குணமும் குறியும் மறைந்துவிடும் என்கிறது புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து. பரம்பொருள் ஆணுமன்று; பெண்ணுமன்று. அந்த வடிவத்திலே நம்மனம் இஷ்டப்படுகிறதோ அந்த வடிவத்திலே பற்றுவைத்து வந்தனர் அனுபூதி நெறி கண்ட நம்மான்றோர்.

பரம்பொருளை அம்மையாகப் பாவித்து வழிபடும் சம்பிரதாயம் மனித குலத்துக்குப் பழையது. சிலர்க்கு லாவகமானது; உணர்ச்சியை வசப்படுத்த இலேசானது; அவ்வாறு பாவனை செய்து வழிபட்ட சாதுக்களின் தோத்திரங்கள் செந்தமிழ் மொழியில் அனந்தம். தோத்திரம் அநந்தமென்றால் அந்தநெறி அம்மையாகப் பரம்பொருளைப் பாவித்துப் பற்றுச் செய்யும் நெறியும் பெருவழக்கு. புத்திக்கும் உணர்ச்சிக்கும் அகப்படாத பரம்பொருளை, அகப்படுத்தும் முறையில் குருலிங்க சங்கமம் என மூன்று பொருள்களைச் சிவஞானபோதம் கடைசியில் குறிப்பிட்டுச் சைவார்த்தத்தை நிர்ணயஞ் செய்கிறது.

> *''செம்மலர் நோன்றாள் சேரலொட்டா*
> *அம்மலங் கழீஇ யன்பரொடுமரீஇ வேடமும்*
> *மாலறநேய மலிந்தவர் வேடமும்*
> *ஆலயந்தானும் அரனெனத் தொழுமே''*

பரம்பொருளைப் பற்றவிடாதவை ஆசாபாசங்கள் இவற்றை நீக்க நல்லவர் சேர்க்கை வேண்டும். அதனால் சிந்தனையுஞ் செயலும் நல்வழிப்பட சிவனடியாரோடு சேர்ந்து கொள்க. ஆலயத்தை வழிபடுக. குருவும் சங்கமமும் லிங்கமும் (கோயில்) பரம்பொருளை நினைப்பதற்கு வியாசங்கள் இது சைவார்த்த நிர்ணயம்.

*முக்த்யை பிராபய சதஸ்தேஷாம்*
*பஜேத் வேஷம் சிவாலயம்*

விடுதலை பெறுவதற்காக நல்லவர்களை அடைவார்; அவர்களையும் சிவனடியார்களையும் சிவாலயத்தையும் வழிபடுக; பற்றுக. பக்தி செய்க. இதுவே நம் முன்னோர்கண்ட முத்திக்கு வழி; முத்தி யென்பது இறவா நிலையாம்; உடம்போடிருந்தபடியே, சதா இறந்து கொண்டிராமல் இறவாத மனச்சாந்தி நிலையை இந்த உபாயங்களால் பெறலாமாம். இது சாத்திரம்; தோத்திரங்களே சாத்திரங்களுக்கு ஆதாரமானவை; தோத்திரங்கள் அனுபூதிச் செல்வங்கள். அவற்றை ஆராய்ந்தால் சாத்திரங்கள் தெரியும்.

இவ்வளவையும் நினைக்கச் செய்தது இந்த அழகிய தோத்திர ரூபமான நூல்; ஆசாபாசங்களில் அலைக்கழியும் எனக்கு இதனை வாசித்துச் சிந்திக்கச் செய்ய ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு என் நண்பன் திரு. சி. கந்தையாப் பெருந்தகைக்கு திரிகரணங்களாலும் திசை நோக்கி ஒரு கும்பிடு போடுகிறேன் "சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்"

நூல் எழுத்துப் பிழையின்றியமைய வேண்டும். நம்பிக்கையுடையவர் இந்த அனுபூதிக் களஞ்சியத்தில் தேவையானதை யெல்லாம் பெற்றால் மனிதரை மனிதர் நேசிக்க வழி பிறக்கும். அதுவே பரம் பொருள் உபாசனைக்கு முதற்படியென எண்ணுகிறேன்.

நவாலியூர் சோ. நடராசன்

**இம்மலர் செவ்வனே வெளியிட உதவியவர் யாவர்க்கும் அம்பாள் கடாட்சம் கிடைப்பதாக.**

*நன்றி.*

## காப்பு

### கணபதி

"நற்குஞ் சரக்கன்று நண்ணில், கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்." 1.

"மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுற,
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்." 2.

### முருகன்

"புன்னெறி யதனிற் செல்லும்
    போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து
    நவையறு காட்சி நல்கி,
என்னையும் அடிய னாக்கி
    இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
    பாதபங் கயங்கள் போற்றி" 3.

### வைரவர்

"பரமனை மதித்திடாப் பங்கை யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்." 4.

### திருமால்

"பச்சைமா மலைபோல் மேனி
    பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
    ஆயர்தங் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
    இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
    அரங்கமா நகரு ளானே" 5.

சிவன்

''உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்'' 6.

''ஆனைமுகன் ஆறுமுகன்
அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணி பதம்நாடு'' 7.

அபிராமி

''சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்
போற்றி, உத்தரியத் தொடிக்கை போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி, கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைந்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற் கண் எம்பிராட்டி,
அரும்பு மிளநகைபோற்றி, ஆரண
நூபுரஞ் சிலம்பும் அடிகள் போற்றி'' 8.

''பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய இருணீங்கச்
சிரந்தழுவு சைவ நெறித்
திருநீற்றின் ஒளிவிளங்க,
அரந்தை கெடப் புகலியர் கோன்
அமுது செயத்திரு முலைப்பால்
சுரந்தளித்த சிவகாம
சுந்தரி பூங்கழல் போற்றி'' 9.

''பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி எழில்
புங்கவி விளங்கு சிவசங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீதநாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித்திடு மடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ

ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே பின்னையுங் கன்னி யெனமறை
பேசும், ஆனந்தரூப மயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை அரசே
வரைராசனுக் கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப் பெண் உமையே.'' 10.

''வேல் கொடுத்தாய் திருச்செந்தூரர்க்
கம்மியின் மீது வைக்க
கால் கொடுத்தாய், நின்மண வாளனுக்குக்
கவுணியர்க்குப்
பால் கொடுத்தாய், மதவேளுக்குமூவர்
பயப்படச்செங்,
கோல் கொடுத்தாய் அன்னையே
எனக்கேதும் கொடுத்திலையே.'' 11.

''படிக்காசன்''

பொய்யாத மொழியுமயல் செய்யாத செயலும்
வீண்போகாத நாளும் விடயம்
புரியாத மனமும் உட்பிரியாத சாந்தமும்
புந்தி தளராத நிலையும்
எய்யாத வாழ்வும் வேறெண்ணாத நிறைவும்
நினைஎன்றும் மறவாத நெறியும்
இரவாத தகவும் மேற்பிறவாத கதியும்
இவ்வேழை யேற்கருள் செய்கண்டாய்
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசும்
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவிளக்கே
ஐயானனங் கொண்டதில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழுமணியே
அகிலாண்டமும் சராசரமும் ஈன்றருள்பரசி
வானந்த வல்லி உமையே, 12.

"தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்
தெடுக்கும் தொழும்பருளக் கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத்துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே." 13.

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்.

சரணங்கள்

1. அழகுள்ள வதனீ அம்பிகை மாதா
அனுதினம் நினதடி போற்றினேம்
விளங்கிடும் தேவியே ஸ்ரீபரமேஸ்வரி
வேத வேதாந்த நாயகியே.

2. மணமலர்மாலை புனைந்துனைக் கனிந்து
மலரடி பணிந்தோம் பராசக்தி
மனமதிற் சஞ்சலம் ஒழித்திடுவாயே
மாயே தாயே நீயே அருள்வாய்—ஓம் 14.

## சக்திகவசம்

இக்கவசத்தை ஆசார அனுட்டானத்துடன் செபிக்க வேண்டும். அதனுல் வெப்புநோயொழியும். எட்டுத்தரம் சலத்தில் அபிமந்திரித்து அதனை உட்கொண்டால் குன்மம், சூலை என்பன நீங்கும். இரவில் செபித்தால் பூதம் பேயிவை தொடரா. கருவுயிர்க்கும் நிலையிலுள்ள கர்ப்பவதிக்குப் பக்கமிருந்து செபிக்கச் சுகப்பிரசவமும், யுத்தத்தில் செபிக்க வெற்றியும் சகல சௌபாக்கியமும் உண்டாகும். இதன் சுகம் கண்டார் பின் விடார்.

அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி யருளி னேடுந்
துங்கமென் சென்னி காக்க வயிணவி துகளிலாகம்
எங்கணுங் காக்க செய்ய வேந்தெழி லுருத்தி ராணி
தங்குமெண் டிசையு மன்பு தழைத்திட வினிது காக்க 1

கொன்னுனைச் சூலி சென்னி மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாழ் சென்னி வயங்கொளி நெற்றி காக்க
பன்மயிர்ப் பருவநாளும் பரிவொடு முமையாள் காக்க
என்னையாண் முக்க ணீச னிறைவிகண் ணிணைகள் காக்க 2

வயமிகு மிமய வல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு விசயை மேல்கீ ழிதழினைச் சிறந்து காக்க
வயிலுடைச் சுருதி தூய வஞ்செவி காக்க தண்ணெண்
பயின்மல ருறையுஞ் செல்வி பல்வினை யுவந்து காக்க 3

சண்டிமென் கபோலங் காக்க தவளநாண் மலரின் வைகும்
ஒண்டொடி நன்னுக் காக்க விசயைமங் கலைமற் றுெவ்வாக்
கண்கவர் நாடி காக்க காத்தியா யனியெஞ் ஞான்று
முண்டக மலரிற்றூய முகத்தினைச் சிறந்து காக்க 4

காளமுண் டிருண்ட நீல கண்டிமென் கழுத்துக் காக்க
கோளில்பூ தார சத்தி சுவற்புறங் காக்க கூர்மி
நீளொளிச் சந்தி காக்க வயிந்திரி நெறியி னேடுந்
தோளிணை காக்க பத்மை துணைமல ரங்கை காக்க 5

கமலைகை விரல்கள் காக்க விரசைகை யுகிர்கள் காக்க
திமிர முண் டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையுஞ்செல்
எமதிரு வாகு மூலங் காக்கவா னவர்க ளேத்த [வி
அமிர்தல கரிநா ஞளு மகன்மணி மார்பங் காக்க 6

தரித்திரி யிதயங் காக்க தயித்தியர்ச் செகுப்போண் மிக்க
கருத்தொடு முலைகள் காக்க சகத்தினி விறைமை பூண்டோ
ழுருத்தகு வயிறு காக்க திகழ்தபோ கதிதன் னுள்ளத்
தருத்தியி னுந்திகாக்க வசைவளர் முதுகு காக்க 7

கருதரு விகடை காக்க கடிதலம் பாமை வாய்ந்த
குருமணிச் சகனங் காக்க குகாரணி குய்யங் காக்க
அருட வருமபாய கந்தினி யபானங் காக்க
தெருளுடை விபுலை யென்றுஞ் சிறப்புடைக் குறங்கு காக்க 8

லளிதைமென் முழந்தாள் காக்க வியற்சபை கணைக்கால் காக்க
களிதரு கோரை வாய்ந்த பரட்டினைக் காக்க மிக்க
அளிகொள்பா தலத்திற் செல்வோ ளணிகெழு புறந்தாள் காக்க
ஒளிர்நகம் விரல்கள் சந்திரி யுக்கிரி யுவந்து காக்க. 9

தலத்துறை மடந்தை யுள்ளங் கரவிணை காக்க தண்ணென்
மலர்த்திரு மனையைக் காக்க வயங்குசேத் திரதை யோங்கி
உலப்பில்கேத் திரங்கள் காக்க பிரியகரை யொழிவரு து
நலத்தகு மக்க டம்மை நன்குறக் காக்கவன்றே. 10

உயர்சனு தனியெஞ் ஞான்று மொழிவறு மாயுள் காக்க
மயர்வறு சீர்த்தி யாவு மாதேவி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவுந் தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி யினிது காக்க. 11

சற்கதி பிரதை நல்லோ ரிலையயினைத் தயாவிற் காக்க
விற்கொடும் போரி னீரில் வெளியினில் வனத்திற் சூதில்
இற்புற மதனி லோங்கு சர்வாணி காக்க வென்னுட்
பொற்றரு மலர்க டூவிப் புங்கவ ரேத்தி னரே. 12

சத்திகவச முற்றிற்று

உ
சிவமயம்

அபிராமியருள்பெற்று விளங்கிய
அபிராமிபட்டர் அருளிய

# அபிராமியந்தாதி

ஆசார சீலராய்க் கோயிலிலோ, சுவாமியறையிலோ பக்தியுடன் பாடவேண்டியது. வேண்டுவார் வேண்டுவதை ஈவாள் சக்தி அபிராமி.

காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுலகேழும் பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே. 1

நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமதோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமியென்றன் விழுத்துணையே. 2

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 3

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே. 4

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 5

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. 6

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 7

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்தமான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. 8

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 9

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே. 10

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்கடிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே வந்து
யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகி
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. 11

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 12

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளேய னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே. 13

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 14

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. 15

சொல்லும் பொருளு மென நட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. 16

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டு கொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. 17

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
வழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லாங்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
யுழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே

மைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே. 19

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதை நெஞ்சாற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றேமுன் செய்புண்ணியமே

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. 21

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினு
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு
[செய்தே. 22

நாயகி நான்முகி நாராயணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கியென்
றாயகி லாதி யுடையாள் சரணம் அரணமக்கே. 23

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. 24

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 25

மின்னு யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னு ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னு தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றிலையே. 26

ஒன்று யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்று ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றுது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவார்
அன்று விலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. 27

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர் தம்மாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையுங்கொண்டு சென்று பொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே; 28

அருணும் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணும் புயமுலைத் தையனல் லாட்கை சேர்நயனக்
கருணும் புயமும் வதனும் புயமுங் கராம்புயமுஞ்
சரணும் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. 29

நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய் நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறு பெற்றேன்
றாயே மலைமகளே செங்கண் மால்திருத் தங்கைச்சியே 30

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனதில்வை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 31

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பு
மூருமுருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 32

தன்ந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. 33

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமு
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. 34

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
விழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே. 35

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனு
மயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினிற் றங்குவரே. 36

குறித்தேன் மனத்தி னின்கோல மெல்லாளின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப்பிரானொரு கூற்றை மெய்யிற்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 37

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்ச
ருயிரவி யுண்ணியு யர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 38

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமே
லப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே. 39

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 40

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே. 41

உடையாளை யொல்குசெம்பட்டுடையாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூ
லிடையாளை யெங்கள் பெம்மா னிடையாளையிங்கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 42

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குட்
டரமன் றிவனென்று தள்ளப் பெறுத்தரி யாதவுணர்
புரமன் றெரியப்பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. 43

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
வுறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே, 44

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. 45

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே. 46

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. 47

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மா
லாமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. 48

குழையைத்தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையைப் பொருதிறல் வேரியம்பாணமும் வெண்ணகையு
முழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப்போது முதிக்கின்றவே

நூற்பயன்

ஆத்தாளை யெங்களபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங்குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழுவார்க்கொரு தீங்கில்லையே

அபிராமியந்தாதி முற்றிற்று. 50

ஓம்
பராசக்தி துணை

**எத்தேசங்களிலும் இடைவிடாமல் சிந்தித்துவரும்**

கன்னனூர்ப் புலவர் பாடிய

# மாரியம்மன் தாலாட்டு

## விநாயகர் துதி

*காப்பு*

கொச்சகக் கலிப்பா

பூதலத்தில் யாவர்களும் போதரவா யென்னாளும்
மாதரசியென்று வாழ்த்துகின்ற மாரியம்மன்
சீதரனார் தங்கை சிறப்பான தாலாட்டைக்
காதலுட னோதக் கணபதியுங் காப்பாமே

வெண் செந்துறை

முந்திமுந்தி விநாயகரே முக்கணனார் தன்மகனே
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமே முன்னடவாய்
வேலவர்க்கு முன்பிறந்த விநாயகரே முன்னடவாய்
வேம்படியிற்பிள்ளையாரே விக்கினரே முன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருச்சாளிவாகனரே
சேரானமால்மருகா கற்பகமே மெய்ப்பொருளே
சீரான நல்மருகா செல்வக்கணபதியே
ஒற்றைக்கொம்போனே யுமையாள் திருமகனே
கற்றைச் சடையணிந்த கங்காதரன் மகனே
வித்தைக்குவிநாயகனே வெண்ணையுண்டோன் மருகா
மத்தக்கரிமுகவா மாயோன் மருகோனே
ஐந்துகரத்தோனே யானை முகத்தோனே
தந்திமதவாரணனே தற்பரனே முன்னடவாய்
நெஞ்சிற்குடியிருந்து நீயெனக்கு முன்னடவாய்
பஞ்சஞ்சுமெல்லடியாள் பார்வதியாள்புத்திரனே
வேழமுகத்தோனே விநாயகரே முன்னடவாய்
தாழ்விலாச்சங்கரனார் சற்புத்திரா வாருமையா
முன்னடக்கம் பிள்ளையார்க்கு கண்ணடக்கம்பொன்னாலே
கண்ணடக்கம் பொன்னாலே காற்சிலம்பு முத்தாலே
முத்தாலே தண்டைகொஞ்ச முன்னட வாய்பிள்ளையாரே
செல்வக் கணபதியுன் சீர்பாதம்நான் மறவேன்

## சரஸ்வதி துதி

தாயே சரஸ்வதியே சங்கரியே முன்னடவாய்
என் தாயே கலைவாணி யேகவல்லி நாயகியே
வாணி சரஸ்வதியே வாக்கில் குடியிருந்து
என்னுவிற் குடியிருந்து நல்லோசை தாருமம்மா
கமலா சனத்தாளே காரடி பெற்றவளே
என்குரலிற் குடியிருந்து கொஞ்சடி பெற்றவளே
என்னுவு தவறுமல் நல்லோசை தாருமம்மா
மாரியம்மன் தன்கதையை மனமகிழ்ந்து நான்பாட
சரியாக என்னுவில் தங்கிக் குடியிரம்மா
கன்னனூர் மாரிமுத்தே கைதொழுது நான்பாட
பின்னமில்லாமல் பிறகிருந்து காருமம்மா

## மாரியம்மன் துதி

மாயிமகமாயி மணிமந்திர சேகரியே
ஆயி வுமையவளே ஆதிசிவன் தேவியரே
மாரித்தாய் வல்லவியே மகராசி காருமம்மா
மாயன் சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
ஆயன் சகோதரியே ஆஸ்தான மாரிமுத்தே
தாயே துரந்த்ரியே சங்கரியே வாருமம்மா
திக்கெல்லாம்போற்று மெக்காலத்தேவியரே
எக்காலத்தேவியரே திக்கெல்லாம் நிறைசத்தி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
நாரணனூர் தங்கையம்மாள் நல்லமுத்துமாரியரே
நல்லமுத்துமாரியரே நாககன்னிதாயாரே
உன்-கரகம்பிறந்ததம்மா கன்னனூர் மேடையிலே
உன்-வேம்புபிறந்ததம்மா விஜயநகர்ப்பட்டணமாம்
உன்-சூலம்பிறந்ததம்மா துலங்குமணி மண்டபத்தில்
உன்-அழகுபிறந்ததம்மா அயோத்திநகர்பட்டணமாம்
உன்-பிரம்புபிறந்ததம்மா பிச்சாண்டிசந்நிதியாம்
உன்-உடுக்கைபிறந்ததம்மா உத்திராட்சப்பூமியிலே
உன்-பம்பைபிறந்ததம்மா பளிங்குமாமண்டபத்தில்
உன்-கருத்துப்பிறந்ததம்மா கஞ்சகிரியிந்தபுரம்
உன்-மருளர்தலழைக்கவம்மா வைரகங்களீடேற
உன்-குமாரவர்க்கந்தான்றழைக்க கொம்பனையேமாரிமுத்தே

உனக்கு-மூன்றுகரகமம்மா முத்தானநற்கரகம்
உனக்கு-ஐந்துகரகமம்மா அசைந்தாடும் பொற்கரகம்
உனக்கு-ஏழுகரகமம்மா எடுத்தாடும் பொற்கரகம்
உனக்கு-பத்துக்கரகமம்மா பதிந்தாடும் பொற்கரகம்
வேப்பிலையும்பொற்கரகம் வீதிவிளையாடிவர
ஆயிரங்கண்ணுடையாள் அலங்காரிவாருமம்மா
பதினாயிரங்கண்ணுடையாள் பராசக்திவாருமம்மா
துலுக்காணத்தெல்லையெல்லாம் குலுக்காடப்பெண்பிறந்தாய்
துலுக்காணத்தெல்லைவிட்டு துரந்தரியேவாருமம்மா
தாயேதுரந்தரியே சங்கரியேவாருமம்மா
மலையாளதேசமெல்லாம் விளையாடப்பெண்பிறந்தாய்
மலையாளதேசம்விட்டு வாருமம்மாயிந்தமுகம்
சமைந்தாய்சமயபுரம் சாதித்தாய்கன்னபுரம்
இருந்தாய்விலாடபுரம் இனியிருந்தாய்கன்னபுரம்
சமயபுரத்தாளே சாம்பிராணிவாசகியே
சமயபுரத்தெல்லைவிட்டு தாயாரேவாருமம்மா
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
கன்னபுரத்தெல்லைவிட்டு காரணியே வந்தமரும்
கடும்பாடியெல்லையெல்லாங் காவல்கொண்ட மாரிமுத்தே
ஊத்துக்காட்டமர்ந்தவளே உதிரபலிகொண்டவளே
படவேட்டமர்ந்தவளே பரசுராமனைப்பெற்றவளே
படவேட்டைவிட்டுமெள்ள பத்தினியேவாருமம்மா
பெரியபாளை யத்தமர்ந்த பேச்சிபெனுமாரியரே
பெரியபாளையத்தைவிட்டு பேரரசிவாருமம்மா
ஆரணிபெரியபாளை யமாம் அதிலிருக்குமாற்றங்கரை
ஆற்றங்கரைமேடைவிட்டு ஆச்சியரேவாருமம்மா
வீராம்பட்டணமமர்ந்தவளே வேதாந்தமாரிமுத்தே
கோலியனூரெல்லையிலே குடிகொண்டமாரியரே
அந்தரத்திற்றேரோட அருகேசெடிலசைய
உச்சியிற்றேரோட உயரச்செடிலசைய
மச்சியிற்றேரோட மகரச்செடிலசைய
பக்கங்கயிரோட பகரச் செடிலசைய
ஆண்டகுருதேசிகரை அறியாதமானிடரை
தூண்டிவிட்டாட்டிவைக்கத் தோன்றினாய் நீயொருத்தி
சக்தியாய்நீயமர்ந்தாய் தனிக்குட்டிகாவுகொண்டாய்
எல்லையிலே நீயமர்ந்தாய் எருமைக்கிடாகாவு கொண்டாய்

உன்னைப்போல்தெய்வம் உலகத்தில்கண்டதில்லை
என்னைப்போல்பிள்ளைகள் தானெங்குமுண்டுவையகத்தில்
கோர்த்தமுத்தவடமசைய கொங்கைரெண்டும்பாலொழுக
ஏற்றவர்க்குவரந்தருவாய் எக்காலதேவியரே
எக்காலத்தேவியரே திக்கெல்லாமாண்டவளே
திக்கெல்லாமாண்டவளே திகம்பரியேவாருமம்மா
முக்கோணசக்கரத்தில் முதன்மையாய்நின்றசக்தி
அக்கோணந்தனில்வந்து ஆச்சியரேவந்தமரும்
தாயேதுரந்தரியே சங்கரியேவாருமம்மா
மாயிமருளியரே மணிமந்திரசேகரியே
வல்லாண்மைக்காரியரே வழக்காடும் மாரிமுத்தே
வல்லவரைக்கொன்றாய்நீ வலியவரைமார்பிளந்தாய்
நீலிகபாலியம்மா நிறைந்ததிருச்சூலியரே
நாலுமூலையோமகுண்டம் நடுவேகனகசபை
கனகசபைவீற்றிருக்கும் காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார் தங்கையரே
நாரணனார் தங்கையரே நல்லமுத்துமாரியரே
நடலைச்சுடலையம்மா நடுச்சுடலைதில்லைவனம்
தில்லைவனத்தெல்லைவிட்டு திரும்புமம்மாயிந்தமுகம்
வார்ப்புச்சிலையாளே வச்சிரமணித்தேராளே
தூண்டித்துடைபருமன் தூண்டிமுள்ளுகைப்பருமன்
மண்டையிலேதைத்தமுள்ளு மார்புருகிப்போகுதம்மா
பக்கத்திற்றைத்தமுள்ளு பதைத்துத்துடிக்குதம்மா
தொண்டையிலே தைத்தமுள்ளு தோளுருகிப்போகுதம்மா
கத்திபோலவேப்பிலையை கதறவிட்டாய்லோகமெல்லாம்
ஈட்டிபோல் வேப்பிலையை யினியனுப்பிக் கொண்டவளே
பத்திரிக்குள்ளிருக்கும் பாவனையையாரறிவார்
வேப்பிலைக்குள்ளிருக்கும் வித்தைதனையாரறிவார்
செடிலோர்துடைபருமன் தூண்டிமுள்ளுகைப் பருமன்
தூண்டிமுள்ளைத்தூக்கித் துடுக்கடக்கும்மாரிமுத்தே
ஒற்றைச்செடிலாட ஊரனைத்தும்பொங்கலிட
இரட்டைச்செடிலாட யிரண்டணியும்பொங்கலிட
பக்கச்செடிலாட படைமன்னர் கொக்கரிக்க
பரமசிவன் வாசலிலே பாற்பசுவுகாவுகொண்டாய்
ஏமனிட வாசலிலே எருமைக்கிடாகாவுகொண்டாய்
எருமைக்கிடாகாவுகொண்டாய் எக்காலதேவியரே
எக்காலதேவியரே திக்கெல்லாமாண்டசக்தி

காசிவளநாட்டாளே கன்னியாகுமரியரே
காசிவளநாட்டைவிட்டு கட்டழகிவாருமம்மா
ஊசிவளநாடு உத்தியாக்குமரி தேசம்
அறியாதான்பாடுகிறேன் அம்மை திருக்கதையை
தெரியாதான் பாடுகிறேன் தேவிதிருக்கதையை
எட்டென்ருலிரண்டறியேன் ஏழையம்மா வுன்னடிமை
பத்தென்ருலொன்றறியேன் பாலனம்மாவுன்னடிமை
பாடவகையறியேன் பாட்டின் பயனறியேன்
வருந்தவகையறியேன் வர்ணிக்கப் பேரறியேன்
பேருமறியேனம்மா பெற்றவளே யென்தாயே
குழந்தை வருந்துவதுன் கோயிலுக்குக் கேட்கிலையோ
மைந்தன் வருந்துவதுன் மாளிகைக்குக் கேட்கிலையோ
பாலன் வருந்துவது பார்வதியே கேட்கிலையோ
கோயிற் கடிமையம்மா கொண்டாடும் பாலகண்டி
மாளிகையைவிட்டு மாதாவேவாரும்மா
சந்நிதியைவிட்டுத் தாயாரும்வாருமம்மா
அரண்மனையைவிட்டு ஆத்தாளேவாருமம்மா
கோயிற்கடிமையம்மா கொண்டாடும்பாலகண்டி
சந்நிதிமைந்தனம்மா சங்கரியேபெற்றவளே
வருந்தியழைக்கிறேனே வண்ணமுகங்காணுமல்
தேடியழைக்கிறேனே தேவிமுகங்காணுமல்
ஏழைக்குழந்தையம்மா எடுத்தோர்க்குப்பாலகண்டி
பாலன்குழந்தையம்மா பார்த்தோர்க்குப்பாலகண்டி
மைந்தன் குழந்தையம்மா மகரர்சிகாருமம்மா
கல்லோடியுன்மனது கரையலையோ எள்ளளவும்
இரும்போஉன்மனது இரங்கலையோ எள்ளளவும்
கல்லுங்கரைந்திடுமுன் மனங்கரையாதென்னவிதம்
இரும்புமுருகிடுமுன் ஹிருதயமுருகாதென்னவிதம்
முன்செய்ததீவினையோ முற்காலத்துப்பயனே
பெரியோர்கள் செய்தவினை யோபெற்றவளே சொல்லுமம்மா
ஏதுமறியேனம்மா ஈஸ்வரியே சொல்லுமம்மா
கடும்பாடிஎல்லையிலே கட்டழகி வீற்றிருப்பாய்
கடும்பாடியெல்லைவிட்டு கட்டழகிவாருமம்மா
கரகத்தழகியரே கட்டழகிமாரிமுத்தே
கரகத்துமீதிருந்து கட்டழகிகொஞ்சுமம்மா
கும்பத்தழகியம்மா கோபாலன்தங்கையரே

கும்பத்துமீதிருந்து கொஞ்சுமம்மா பெற்றவளே
கொஞ்சுமம்மாபெற்றவளே குறைகளொன்றும்வாராமல்
உனக்கு-பட்டுபளபளென்ன பாடகக்கால்சேராட
உனக்கு-முததுமொளமொளன்ன மோதிரக்கால்சேருட
உலகமெல்லாம் முத்தெடுக்க உள்ளபடி தான்வந்தாய்
தேசமெல்லாம் முத்தெடுப்பாய் தேவிகன்னனூராளே
முத்தெடுத்துத் தான்புகுந்தாய் உத்தமியே மாரிமுத்தே
உனக்கு-ஈச்சங்குறைக்கூடையிருக்கட்டும் பொன்னாலே
உனக்குதாழங்குறைக்கூடை தனிக்கட்டும் பொன்னாலே
குறக்கூடை முத்தெடுத்து கொம்பனையே நீபுகுந்தாய்
கோயிலின் சந்தடியில் கூப்பிட்டால் கேளாதோ
அரண்மனைச்சந்தடியில்-அழைத்தாலும் கேளாதோ
அரண்மனைச் சந்தடியில்-அழைத்தாலும் கேளாதோ
மாளிகையின் சந்தடியில் மாதாவேகேட்கிலேயோ
மக்களிட சந்தடியோ மருமக்கள் சந்தடியோ
பிள்ளைகளின் சந்தடியோ பேரன்மார்ச் சந்தடியோ
அனந்தநல் பெருமையோ ஆசாரச் சந்தடியோ
கந்தடியை நீக்கியம்மா தாயாருமிங்கேவர
கொல்லிமலையாண்டவனைக் குமரகுருபரனை
காத்தவராயனைத்தான் கட்டழகிதானழையும்
தொட்டியத்துச்சின்னானை துரைமகனைத்தானழையும்
மதுரைவீரப்பனையென் மாதாவேதானழையும்
பாவாடைராயனைத்தான் பத்தினியேதானழையும்
கருப்பண்ணசுவாமியையும் கட்டழகி தானழையும்
சங்கிலிக்கருப்பனைத்தான் சடுதியிற்றானழையும்
முத்தாலுராவுத்தன் மூலையுள்ள சேவகரை
பெரியபாளையத்தமர்ந்த பேச்சியரேமாதாவே
பாளையக்காரியம்மா பழிகாரிமாரிமுத்தே
கன்னனூர்மாரிமுத்தே கலகலென நடனமிடும்
உன்னைப்பணிந்தவர்க்கு உற்றதுணை நீயிரம்மா
ஆதிபரமேஸ்வரியே அருகே துணை நீயிரம்மா
உன்னைப்போல் தெய்வத்தை உலகத்தில் கண்டதில்
என்னைப்போல் மைந்த ரெங்குமுண்டு வையகத்தில்
உன் மகிமையறிந்தவர்கள் மண்டலத்தில் யாருமில்லை
உன்-சேதியறிவாரோ தேசத்து மானிடர்கள்
சேதியறி யாதுலகில் செத்தமனு கோடியுண்டு
உன்-மகிமையை யானறிந்து மண்டலத்தில் பாடவந்தேன்

உன்மகிமை யறியாதுலகில் மாண்டமனு கோடியுண்டு
தப்புபிழை வந்தாலும் சங்கரியே நீபொறுத்து
ஆறுதப்பு நூறுபிழை அடியார்கள் செய்ததெல்லாம்
மனது பொறுத்து மனமகிழ்ச்சி யாகவேணும்
தேவிமனம் பொறுத்து தீர்க்கமுடன் ரட்சியம்மா
கொண்டுமனம் பொறுத்து கொம்பனையே காருமம்மா
காக்கக் கடனுனக்கு காரண சவுந்தரியே
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்
வேணுமென் றுகாரடிநீ வேப்பஞ் சிலையாளே
பக்கத்துணை யிருந்து பாலகனைக் காருமம்மா
பொரிபோலெழும்பிநீ பூரித்து ஆலித்து
ஆலித்துநீயெழும்பி ஆத்தாளிறங்குமம்மா
சிரசினில்முத்தையம்மா தற்காத்துநீயிறக்கும்
முகத்தினில்முத்தையம்மா முன்னுதாய்நீயிறக்கும்
கழுத்தினில்முத்தையம்மா கட்டழகிநீயிறக்கும்
தோளினில்முத்தையம்மா துரந்தரியேநீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவேநீயிறக்கும்
வயிற்றினில்முத்தையம்மா மகேஸ்வரியேநீயிறக்கும்
துடையினில்முத்தையம்மா தேவியேநீயிறக்கும்
முழங்காலில் முத்தையம்மா மீனாக்ஷிநீயிறக்கும்
கணுக்காலில் முத்தையம்மா காமாக்ஷிநீயிறக்கும்
பாதத்தில்முத்தையம்மா பாரினிலிறக்கிவிடும்
பூமியிலிறக்கிவிடும் பெற்றவளேகாருமம்மா
பெற்றவளே தாயே பேரரசிமாரிமுத்தே
உற்றதுணையிருந்து உகந்தரியேகாருமம்மா
உன்னை விடபூமிதனில் உறுதுணை வேறுமுண்டோ
பக்கத்துணையிருந்து பாதுகாத்துரட்சியம்மா
செக்கச்சிவந்தவளே செங்கண்ணன் தங்கையரே
மங்கையெனுமா தரசி மகராசிகாருமம்மா
திங்கள் வதனியரே தேவிகன்ன னூராளே
எங்கள்குலதேவியரே ஈஸ்வரியேகண்பாரும்
மங்களவிநோதி மாதாவேகண்பாரும்
ஏழைக்கிரங்காமல் இப்படியே நீயிருந்தால்
வாழ்வதுநானெக்காலம் வார்ப்புச்சிலையாளே
ஆயிமகமாயி ஆரணங்கு சொற்காரணியே
மாயிமகமாயி மணிமந்திரசேகரியே

இரங்கிரங்குந்தாயாரே எங்களைக்காப்பாற்றுமம்மா
மாரித்தாய்வல்லவியே மகராசிகாருமம்மா
வீரணன்சோலையிலே ஆரணமதானசத்தி
நீதிமன்னர்வாசலிலே நேராய்க்கொலுவிருந்தாய்
கொலுவிருந்தசத்தியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்
கோர்த்தமுத்துநீயிறக்கும் கொம்பனையேமாரிமுத்தே
போட்டமுத்துநீயிறக்கும் பொய்யாதவாசகியே
பொய்யாதவாசகியே புண்ணியவதியீஸ்வரியே
செடிலோதுடைபருமன் தூண்டிமுள்ளோகைப்பருமன்
அடங்காதமானிடரை ஆட்டிவைக்கும்மாரிமுத்தே
துஷ்டர்கள்தெண்டனிட்டு துடுக்கடக்கும்மாரிமுத்தே
கண்டவர்கள் தெண்டனிட்டுக் கலக்கமிடுமாரிமுத்தே
அண்டாதபேர்களைத்தான் ஆணவத்தைத்தானடக்கி
இராஜாக்களெல்லோரும் நலமாகத்தான்பணிய
மகுடமுடிமன்னர் மனோன் மணியைத் தான்பணிய
கீரீடமுடிதரித்த் கீர்த்தியுள்ளராஜாக்கள்
மகுடமந்திரிகள்வந்து மன்னிதெண்டனிட்டுநிற்க
பட்டத்துரைகள் படைமுகத்துராஜாக்கள்
வெட்டிக்கெலித்துவரும் வேதாந்தவேதியர்கள்
துஷ்டர்களைத்தானடக்கும் சூலிகபாலியம்மா
அடங்காதமானிடரை யடிமைபலிகொண்டசத்தி
மிஞ்சிவரும்ராட்சதரை வெட்டிவிருதுண்டகண்ணே
தஞ்சமென்றமானிடரை தற்காக்கும்பராபரியே
அவரவர்தான்பணிய வாக்கினைப்பெற்றவளே
சிவனுடனேவாதாடும் சித்தாந்தமாரிமுத்தே
அரனுடனேவாதாடும் ஆஸ்தானமாரிமுத்தே
பிரமனுடன்வாதாடும் பெற்றவளேமாரிமுத்தே
விஷ்ணுவுடன்வாதாடும் வேதாந்தமாரிமுத்தே
எமனுடன்வாதாடும் எக்காலதேவியரே
தேவருடன்வாதாடும் தேவிகன்னனூராளே
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே கர்த்தனிடதேவியரே
நெருப்பம்மாவுன்சொரூபம் நிஷ்டூரக்காரியரே
அனலம்மாவுன்சொரூபம் ஆஸ்தானமாரிமுத்தே
தணலம்மாவுன்சொரூபம் தரிக்கமுடிபோகாது
அண்டர்நெருப்பேயம்மா ஆதிபரமேஸ்வரியே

காத்தானைப்பெற்றவளே கட்டழகிமாரிமுத்தே
தொட்டியத்துச்சின்னானை தொழுதுவரப்பண்ணசக்தி
கருப்பனையுங்கூடவேதான் கண்டுபணியவைத்தாய்
பெண்ணரசிக்காகப் பிள்ளையைக் கழுவில்வைத்தாய்
ஆணழகிக்காக மைந்தனைக்கழுவில்வைத்தாய்
அடங்காதபிள்ளையென ஆண்டவனைக் கழுவில்வைத்தாய்
துஷ்டனிவனென்று துடுக்கடக்கி கழுவில்வைத்தாய்
பாரினில்முத்தையம்மா பத்தினியேதாயாரே
வாரியெடுக்கவொரு வஞ்சியரையுண்டுபண்ணாய்
முத்தெடுக்குந்தா தியோசனைப்பெண்ணேயென்று
தாதியரைத்தானழைத்து தாயாரேமுத்தெடுப்பாய்
முத்தெடுத்துத்தான்புகுந்து உத்தமியாள் மாரிமுத்தே
மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
ஆயிவுமையாளே ஆஸ்தானமாரிமுத்தே
பாரமுத்தைநீயிறக்கிப் பாலனைக்காருமம்மா
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
சொற்கேளாப்பிள்ளையென்று தூண்டிக்கழுவில்வைத்தாய்
கழுதனக்குமோர் வார்க்கக்கட்டழகி யுண்டுபண்ணாய்
நல்லதங்காளையுண்டுபண்ணாய் நற்கழுவுக்குமோர்வார்க்க
உறியில்தயிர்வார்க்க உத்தமியேயுண்டுபண்ணாய்
உன் மகனைக்காத்தாற் போலிவ்வடிமையைக்காருமம்மா
எவ்வளவுநேரமம்மா ஏறெடுத்துப்பாருமம்மா
கடுகளவுநேரமம்மா கண்பார்க்கவேணுமம்மா
கடைக்கண்ணால் நீபார்த்தால் கடைத்தேறிப்போவேன்
பாரளந்தோன் தங்கையரே பாலகனைக்காருமம்மா
பேராசிமாரிமுத்தே பிள்ளைகளைக்காருமம்மா
மகமாயிமாரிமுத்தே மைந்தர்களைக்காருமம்மா
பெற்றவளேமாரிமுத்தே பிள்ளைகளைக்காருமம்மா
ஆணழகிமாரிமுத்தே அடிமைகளைக்காருமம்மா
பூணாரம்பூண்டவளே பிள்ளைகளைக்காருமம்மா
பாரமெடுக்கவாம்மா பாலகனாலாகுமோதான்
பூணாரந்தானெடுக்க பிள்ளையாலாகுமோதான்
வருத்தப்படுத்தாதே மாதாவேகண்பாரும்
பாலன் படுந்துயரம் பாக்கியவதிபார்க்கிலையோ
மைந்தன்படுந்துயரம் மாதாவேபார்க்கிலையோ
குழந்தைபடுந்துயரம் கொம்பனையோபார்க்கிலையோ
சிற்றடிகள்படுந்துயரம் தேவியரேபார்க்கிலையோ

பூரணுமுத்திரையைப் பெற்றவளே தாளிறக்கும்
ஆபரணமுத்திரையை ஆத்தாளிறக்குமம்மா
இரங்கிரங்குந்தாயாரே எங்களைக்காப்பாற்றுமம்மா
அடிமைதனைக்காப்பாற்றி ஆணழகிநீயிறக்கும்
கும்பத்துமாரியம்மா கொலுவிலலங்காரியரே
கோர்த்தமுத்துநீயிறக்கும் கொம்பனையேமாரிமுத்தே
மாரியென்ருல்மழைபொழியும் தேவியென்ருல் தேன்சொரியும்
தேவியென்ருல் தேன்சொரியும் திரிபுரசுந்தரியே
திரிபுரசுந்தரியே தேசத்துமாரியம்மா
பொன்னுமுத்துமாரியரே பூரண்சவுந்தரியே
தாயாரேபெற்றவளே சத்தகன்னிசுந்தரியே
பேருமறியேனம்மா பெற்றவளே தாயாரே
குருடன்கைக்கோலென்று கொம்பனையேநீயறிவாய்
கோலைப்பிடுங்கிக்கொண்டால் குருடன் பிழைப்பானே
இப்படிக்குநீயிருந்தா லினிப்பிழையோந்தாயாரே
கலிபிறக்குமுன்பிறந்த கனத்ததோர்மாரிமுத்தே
யுகம்பிறக்குமுன்பிறந்த உத்தண்டமாரிமுத்தே
கலியுகத்தில்தாயே கண்கண்டதெய்வம்நீ
உன்னைப்போல்தெய்வம் உலகத்தில்கண்டதில்லை
என்னைப்போல்மைந்தர் தானெங்குமுண்டுவையகத்தில்
அனலைமதியாய்நீ யாவரையுஞ்சட்டை பண்ணுய்
புனலைமதியாய்நீ பூ லோகஞ்சட்டைபண்ணுய்
வருந்தியழைக்கிறேனும் திருமுகத்தைக்காணுமல்
பாலனைக்காத்து பாதத்தாலுதைத்துவிட்டு
மைந்தனைக்காத்து மகராசிவுதைத்துவிடு
குழந்தையைக்காத்துநீ கொம்பனையேயுதைத்துவிடு
ஆதிபரஞ்சோதி அங்குகண்ணேவாருமம்மா
வெள்ளிக்கிழமையிலே கொள்ளிக்கண்மாரியரே
வெள்ளியிலுந்திங்களிலும் வேண்டியபேர் பூசைசெய்ய
பூசைமுகத்திற்குப் போனேனென்றுசொல்லாதே
இந்தமனையிடத்தி லீஸ்வரியே வந்தருள்வாய்
வந்தமனைவாழுமம்மா இருந்தமனையீடேறும்
இருந்தமனையீடேற ஈஸ்வரியேவந்தருள்வாய்
கண்பாரும்கண்பாரும் கனகவல்லித்தாயாரே
நண்பானபிள்ளைகளை நலிந்திடநீசெய்யாதே
உன்னை நம்பினேரை வோய்ந்துவிடச்செய்யாதே
அந்நீதஞ்செய்யாதே ஆயிமகமாயி

வேம்புரதமேறி வித்தகியேவாருமம்மா
பச்சிலைரதமேறி பார்வதியேவாருமம்மா
கொலுவிருந்தசக்தி கோர்த்தமுத்தை நீயிறக்கு
போட்டமுத்தை நீயிறக்கும் பூலோகமாரிமுத்தே
கேளிக்கையாகக்கிளிமொழியே முத்திறக்கு
அரும்பாலகன்றன்னை அவஸ்தைப்படுத்தாதே
வருத்தப்படுத்தாதே மாதாவேகண்பாரும்
அன்னமிறங்கவம்மா ஆத்தாளேகண்பாரும்
ஊட்டத்தை நீகொடுத்து உத்தமியேகாருமம்மா
இரக்கங்கொடுத்துநீ ஈஸ்வரியேகாருமம்மா
காருமம்மா பெற்றவளே காலுதலைநோகாமல்
எங்கேயோ பாராமுகமாயிருந்தேனென்று சொல்லாதே
அந்திசந்திபூசையிலே அசதியாயெண்ணுதே
ஒட்டாரம்பண்ணுதே ஓங்காரமாரிமுத்தே
பாவாடம்நேருமம்மா பழிகள்வந்துசேருமம்மா
பாவாடம் நேர்ந்ததென்றால் பாருலகுஏற்காது
கண்டார்நகைப்பார்கள் கலியுகத்தாரேசுவார்கள்
கலியுகத்தாரேசுவார்கள் கட்டழகிமாரிமுத்தே
பார்த்தார்நகைப்பார்கள் பரிகாசம்பண்ணுவார்கள்
உதடுபடைத்தவர்கள் உதாசீனஞ் சொல்லுவார்கள்
பல்லைப்படைத்தவர்கள் பரிகாசம் பண்ணுவார்கள்
நாவைப்படைத்தவர்கள் நாணயங்கள்பேசுவார்கள்
பார்த்தார்நகைக்கவம்மா பரிகாசம்பண்ணுதே
கச்சிப்பதியாளே காமாட்சித்தாயாரே
தாயாரேபெற்றவளே தயவுவைத்துக்காருமம்மா
மாதாவேபெற்றவளே மனம்பொறுத்துக்காருமம்மா
பார்வதியேபெற்றவளே பக்ஷம்வைத்துக்காருமம்மா
ஆயிரங்கண்ணுடைய அலங்காரிவாருமம்மா
பதினாயிரமுத்தினிலே பார்த்தெடுத்தவாணிமுத்து
நூறாயிரமுத்தினிலே நூற்றெடுத்தவாணிமுத்து
ஆயிரங்கண்முத்துதனிலார்த்தாள் வளர்ந்தெழுந்தாள்
நாகத்தின்கண்ணேயம்மா நல்லவிடைப்பாம்பே
சேஷத்தின் கண்ணேயம்மா சின்னவிடைப்பாம்பே
அஞ்சுதலைநாகமுன்னைக் கொஞ்சிவிளையாடுதம்மா
பத்துத்தலைநாகமம்மா பதிந்துவிளையாடுதம்மா
செந்தலைநாகமம்மா சேர்ந்துவிளையாடுதம்மா

கருந்தலைநாகமம்மா காக்குதம்மாவுன்கொலுவில்
சேஷனென்றபாம்பையெல்லாம் சேரவேபூண்டசக்தி
நாகமென்றபாம்பையெல்லாம் நலமாகப்பூண்டசக்தி
அரவமென்றபாம்பையெல்லா மழகாகப்பூண்டசக்தி
ஆபரணமாய்ப்பூண்டாய் அழகுள்ள பாம்பையெல்லாம்
நாகங்குடைபிடிக்க நல்லபாம்பு தாலாட்ட
பூணாரமாய்ப்பூண்டாய் பொன்னுதிருமேனியெல்லாம்
தாலாட்டதாலாட்ட தாயார்மனமிரங்க
சேஷன்குடைகவியச் செந்நாகம்வட்டமிட
வட்டமிட்டு வீற்றிருந்தாய் மாரிகன்னனூராளே
மார்மேலேநாகமம்மா மடிபேல்புரண்டாட
தோள்மேலேநாகமம்மா தொடைமேற்புரண்டாட
மார்மேலுந்தோள்மேலும் வண்ணமடிமேலும்
கொஞ்சிவிளையாடுதம்மா கோபாலன்தங்கையரே
ஏழையாலாகுமோதான் ஈஸ்வரியைத்தோத்தரிக்க
குழந்தையாலாகுமோ கொம்பனையைத்தோத்தரிக்க
அடியேனாலாகுமோதான் ஆத்தாளைத்தோத்தரிக்க
எந்தனாலாகுமோதான் ஈஸ்வரியைத்தோத்தரிக்க
இல்லையென்பார்பங்கில் ஈஸ்வரிமாரிமுத்தே
நில்லாயரைநாழி நிஷ்டூரத்தாண்டவியே
உண்டென்பார்பங்கில் ஒளிவிளக்காய்நின்றசக்தி
பார்த்தோர்க்குசெல்வனம்மா பாலன்குழந்தையம்மா
உன்னைப்பகைத்தோர்க்கு உருமார்பிலாணியம்மா
நினைத்தோர்க்குத்தெய்வமம்மா எதிர்த்தார்க்குமார்பிலாணி
தாயேநீவாருமம்மா தற்பரையாய்நின்றசக்தி
வாக்கிட்டால்தப்பாது வரங்கொடுத்தால் பொய்யாது
பொய்யாதுபொய்யாது பூமலர்தான்பொய்யாது
பூவிரண்டுபூத்தாலும் நாவிரண்டுபூக்காது
மறவரிடவாசலிலே மல்லிகைப்பூபூத்தாலும்
மறவரறிவாரோ மல்லிகைப்பூவாசனையை
குறவரிடவாசலிலே குடமல்லிபூத்தாலும்
குறவரறிவாரோ குடமல்லிவாசனையை
பன்றிமுதுகினில் பன்னீரைப்பூசினுக்கால்
பன்றியறியுமோதான் பன்னீரின்வாசனையை
எந்தனலேயாகுமோதான் ஈஸ்வரியைத்தோத்தரிக்க
மைந்தனாலாகுமோதான் மாதாவைநமஸ்கரிக்க

பிள்ளையாலாகுமோதான் பெற்றவளை நமஸ்கரிக்க
பாலனாலாகுமோதான் பார்வதியை நமஸ்கரிக்க
எச்சிலொருகோடி இனந்தீட்டுமுக்கோடி
தீட்டுவொருகோடி தெருவெங்குந்தானுமுண்டு
கன்னிகள்தீட்டு கலந்தோடி வந்தாலும்
ஆறுதப்புநூறுபிழை அடியார்கள் செய்தாலும்
தாயேமனம்பொறுத்து தயவாகக்காருமம்மா
எச்சிற்கலந்ததென்று இடையப்போய்நிற்காதே
தீட்டுக்கலத்தாலும் தேவிமனம்பொறுத்து
எச்சிற்கலந்தாலும் ஈஸ்வரியேமனம்பொறுத்து
பக்ஷம்வைத்துக்காருமம்மா பராபரியே அங்குகண்ணு
விருப்பம்வைத்துக்காருமம்மா விருதுபடைத்தசத்தி
நீலிகபாலியம்மா நிறைந்தபஞ்சாட்சரியே
சூலிகபாலியம்மா சுந்தரியேமாரிமுத்தே
நிஷ்டூரக்காரியரே விஸ்தாரமுள்ளசத்தி
வேப்பிலையால்தான்தடவி விசிறிமுத்தமுழுத்திவிடு
ஆனபராசத்தியரே அம்மைமுத்தழுத்திவிடு
இரங்கிரங்குத்தாயாரே ஈஸ்வரியேநான்பிழைக்க
படவேடமர்ந்தவளே பரசுராமனைப்பெற்றவளே
ஊத்துக்காட்டமர்ந்தவளே உத்திரபலிகொண்டவளே
வீராம்பட்டணமமர்ந்த வேதாந்தமாரிமுத்தே
சமைந்தாய்சமயபுரம் சாதித்தாய்கன்னபுரம்
கன்னபுரத்தெல்லையெல்லாம் காவல்கொண்டமாரியரே
எக்காலதேவியரே ஈஸ்வரியேயிறங்குமம்மா
திக்கெல்லாம்பேர்படைத்த தேசத்துமாரியரே
அண்டபுவனமெல்லாந் துண்டரீகமுண்டசக்தி
கச்சிப்பதிகாளே காமாட்சிதாயாரே
கைலாசலோகமெல்லாம் காவல்கட்டியாண்டவளே
பாதாளலோகமெல்லாம் பரதவிக்கப்பண்ணசக்தி
காலைக்கொலுவிலம்மா காத்திருந்தாராயிரம்பேர்
உச்சிக்கொலுவிலம்மா உகந்திருந்தாராயிரம்பேர்
அந்திக்கொலுவிலம்மா அமர்ந்திருந்தாராயிரம்பேர்
கட்டியக்காரரெல்லாம் கலந்தெச்சரிக்கைபண்ண
பாடும்புலவரெல்லாம் பண்பிசைத்தபாடல்சொல்ல
வடுகர்துலுக்கரோடு மராட்டியர்கன்னடியர்
கன்னடியர்காவலுடன் கர்நாட்டுப்பட்டாணியர்
இட்டசட்டைவாங்காத இடும்பரெல்லாங்காத்திருக்க

போட்டசட்டைவாங்காத பொந்திலியர்காத்திருக்க
வடுகர் துலுக்கரம்மா மறுதேசப்பட்டாணியர்
வேடிக்கைபார்த்திருந்தாள் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிமொழிமாரிமுத்து
மாயமெல்லாமுன்மாயம் மருளரெல்லாமுன்மருளர்
மருளர்தழைக்கவம்மா மருமக்களீடேற
பலிசட்டிதானெடுக்கும் புத்திரர்கள்தான்தழைக்க
வேதங்கள்தான் தழைக்க விண்ணவர்களீடேற
குமாரர்கள்தான் தழைக்க மாதாவேகண்பாரும்
மைந்தர்கள்தான்தழைக்க மாதாவேகண்பாரும்
காஞ்சிபுரியிலேதான் கர்த்தரையும் நீ நினைத்து
கர்த்தரையும்நீநினைத்து காமாட்சிபூசைபண்ணாய்
கங்கைமுழுகியம்மா வனமயிலேதவமிருந்தாய்
வைகைமுழுகியம்மா வனமயிலேதவமிருந்தாய்
பொய்கைமுழுகியம்மா பெற்றவளே தவமிருந்தாய்
தவத்தில்மிகுந்தவளே சத்தகன்னிதாயாரே
ஆற்றுமணலெடுத்து அரனுரையுண்டுபண்ணாய்
சேற்றுமணலெடுத்து சிவனுரையுண்டுபண்ணாய்
கங்கைநதியிலே காமாட்சிதவமிருந்தாய்
இருநூற்றுகாதவழி திருநீற்றால்கோட்டையிட்டாய்
திருநீற்றால்கோட்டையிட்டாய் திகம்பரிமாரிமுத்தே
அருணாசலந்தனிலெ ஈசான்யமூலையிலே
திருவண்ணாமலையிலேதான் தேவிதவமிருந்தாய்
அருணாசலத்தினிலேதான் ஆத்தாள்தவமிருந்தாய்
ஈசான்யமூலையிலே இருந்தாய்பெருந்தவசு
இருந்தாய்பெருந்தவசு இடப்பாகம் பேறுபெற்றாய்
இடப்பாகம்பெறுபெற்ற ஈஸ்வரியேமாதாவே
காகமுதுகினிற் கதம்பப்பொடிபூசிவைத்தால்
காகமறியுமோதான் கதம்பப்பொடிவாசனையை
கொக்குமுதுகினில் கோமேதகங்கட்டிவைத்தால்
கொக்குமறியுமோதான் கோமேதகத்தினொளியை
மூலக்கனலில் முதன்மையாய்நின்றசக்தி
பாலனுக்குவந்த பாரயெரிச்சல்களில்
காலெரிவுகையெரிவு கட்டழகிவாங்குமம்மா
குத்தல்குடைச்சல் குலைமாரிடிநோவு
மண்டைக்குடைச்சலோடு மாரடைப்புதலைநோவு

வாதபித்தம்சீதசுரம் வனபிணியைக்காருமம்மா
இடுப்புக்குடைச்சலைத்தா னீஸ்வரியேவாங்குமம்மா
பித்தவலிதனைக் கட்டழகிவாங்குமம்மா
கழுத்துவலிதனைக் கட்டழகிவாங்குமம்மா
பத்திரியால்தான்றடவி பாரமுத்தமுத்திவிடு
விபூதியைப்போட்டு இறக்கிவிடுமுத்திரையை
வேப்பிலைபட்டவிடம் வினைகள்பறந்தோடுமம்மா
பத்திரிபட்டவிடம் பாவம்பறந்தோடுமம்மா
விபூதிபட்டதக்ஷணமே வினைகள்பறந்தோடுமம்மா
பஞ்சாக்ஷரம்பட்டால் பாவங்கள்பறந்தோடுமம்மா
பத்தென்றுலிரண்டறியேன் பாலனம்மாவுன்னடிமை
எட்டென்றுலிரண்டறியேன் ஏழையம்மாவுன்னடிமை
நாகத்தின்கண்ணேயம்மா நல்லவிடைபாம்பே
சேஷத்தின்கண்ணேயம்மா சின்னவிடைபாம்பே
பாம்பேதலைக்கணைதான் வேப்பிலையோபஞ்சுமெத்தை
வேப்பம்பாலுண்டவளே வேதாந்தமாரிமுத்தே
ஐந்நூறுபாம்புனக்கு அள்ளிபிட்டவீரசடை
வீரசடைமேலிருந்து மெல்லியரேகொஞ்சுமம்மா
முந்நூறுசந்தி முதற்சந்தியுன்னுதென்றுய்
நாநூறுசந்தி நடுச்சந்தியுன்னுதென்றுய்
சந்திக்குச்சந்தி தனிச்சந்தியுன்னுதென்றுய்
வீதிக்குவீதி வெளிச்சந்தியுன்னுதென்றுய்
பட்டத்தழகியம்மா படைமுகத்துராஜகன்னி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
திருவிளக்குநாயகியே தேவிகன்னனூராளே
மணிவிளக்கின்மேலிருந்து மாதாவே கொஞ்சுமம்மா
விளக்கிற்குடியிருந்து மெல்லியரே கொஞ்சுமம்மா
திருவிளக்கின்மேலிருந்து தேவியரே கொஞ்சுமம்மா
கொஞ்சுமம்மாபெற்றவளே கோபாலன் தங்கையரே
சிரித்தார்முகத்தையம்மா செல்லரிக்ககண்டிடுவாய்
பரியாசஞ்செய்தவரைப் பல்லைப்பிடுங்கிவைப்பாய்
மூலைவீட்டுப்பெண்களைத்தான் முற்றத்திலாட்டிடுவாய்
அரண்மனைப்பெண்களைத்தா னம்பலத்திலாட்டிடுவாய்
பாப்பாரபெண்களைத்தான் தோற்பாதங்காட்டிடுவாய்
தோற்பாதங்காட்டிடுவாய் துரந்தரியேமாதாவே
நடுவீதியிற்கொள்ளிவைத்து நானறியேனென்றிடுவாய்
கடைவீதியிற்கொள்ளிவைத்து கடக்கப்போய்நின்றிடுவாய்

கடியாவிஷம்போலக் கடிக்கவிட்டுப்பார்த்திருப்பாய்
தீண்டாவிஷம்போல தீண்டவிட்டுப்பார்த்திருப்பாய்
பாம்புகண்ணிநீலியம்மா பழிகாரமாரிமுத்தே
தாயேதுரந்தரியே சர்வலோகமாதாவே
ஆருதகோபமெல்லா மாச்சியரேவிட்டுவிடு
கடலில்முழுகியம்மா கடுகநீவாருமம்மா
காவேரியில்தான் முழுகி காமாட்சிவாருமிங்கே
வந்தமனைவாழுமம்மா இருந்தமனையீடேறும்
கஞ்சாவெறியன் கனவெறியன்பாவாடை
பாவாடைராயனைத்தான் பத்தினியேதானழையும்
தாயாரும்பிள்ளையுமாய் தற்காக்கவேணுமம்மா
மாதாவும்பிள்ளையுமாய் மனதுவைத்துக்காருமம்மா
ஆத்தாளும்பிள்ளையுமாய் அன்புவைத்துக்காருமம்மா
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
காசிவளநாட்டைவிட்டு காரணியேவந்தருளும்
ஊசிவளநாட்டைவிட்டு உத்தமியேவந்தருளும்
பம்பைமுழங்கிவர பரமேளமார்பரிக்க
சிற்றுடுக்கைகொஞ்சிவர சிறுமணிகளோலமிட
வேடிக்கைபார்த்திருந்தால் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிழிமொழியாள்மாரிமுத்து
சமயபுரத்தாளே சாம்பிராணிவாசகியே
முக்கோணத்துள்ளிருக்கும் முதலாகநின்றசத்தி
நாற்கோணத்துள்ளிருக்கும் நல்லமுத்துமாரிமுத்தே
பஞ்சாரப்பொருளே ஆனந்தமாரிமுத்தே
அறுகோணத்துள்ளிருக்கும் ஆதிபரமேஸ்வரியே
அஷ்டாக்ஷரப்பொருளே ஆனந்தமாரிமுத்தே
நாயகியேமாரிமுத்தே நாரணனுர்தங்கையரே
ஐம்பத்தோரக்ஷகியே ஆதிசிவன்தேவியரே
ஆதிசிவன்தேவியரே அம்மைமுத்துமாரியரே
பேருலகரக்ஷகப் பெருமாளுடன்பிறப்பே
பெருமாளுடன்பிறந்து பேருலகையாண்டவளே
அயனுடன்பிறந்து அம்மைமுத்தாய்நின்றவளே
திரிகோணத்துள்ளிருக்கும் திரிபுரசவுந்தரியே
ஆருதாரப்பொருளே அபிஷேகபத்தினியே
மூலதாரப்பொருளே முன்பிறந்ததேவதையே
தாயேதுரந்தரியே சர்வலோகேஸ்வரியே
பத்திரியால்தான் தடவிப்பாரமுத்தைத்தானிறக்கும்

வேப்பிலையால்தான் தடவி மெல்லியரேதானிறக்கும்
மேனியெல்லாந்தான் குளிர விளையாடிமுத்திறக்கும்
இரங்கிரங்குந்தாயாரே எங்களைக்காப்பாற்றுமம்மா
முத்திலுமுத்து முகத்திலிடுமாணிமுத்து
எங்கும்நிறைந்த எல்லாருக்கும்மாரி முத்து
பெண்ணுய்ப்பிறந்து பேருலகையாளவந்தாய்
பேருலகையாளவந்த பெண்ணரசிமாரிமுத்தே
நிந்தம்பராமரிக்க நிஷ்டூரிநீபிறந்தாய்
தேசம்பராமரிக்க தெய்வகன்னிநீபிறந்தாய்
கிளியேந்தும்நாயகியே கிளிமொழியேதாயாரே
நித்தியகல்யாணி நீலிபரஞ்சோதி
அம்மணிபார்வதியே ஆணிமுத்துதாயாரே
லோகமெல்லாமுத்தளக்கும் லோகபரமேஸ்வரியே
வெற்றிக்கொடிபறக்க விருதுபம்பைதான் முழங்க
எக்காளமூதிவர எங்குங்கிடு கிடென்ன
பஞ்சவர்ணடால்விருது பக்கமெல்லாஞ்சூழ்ந்துவர
நாதசுரமேளம் நாட்டியங்களாடிவர
தப்பட்டைமேளம் தவின்முரசு தான்முழங்க
காளங்களூதிவரக் கவிவாணரெச்சரிக்க
சின்னங்களூதிவரச் சிறப்பாய்க்கொடிபிடிக்க
ஜண்டாசிலர்பிடிக்கத் தனிமுரசுதானடிக்க
கொடிகள்சிலர்பிடிக்க கொக்கரிப்பார்வீரமக்கள்
சாமரைகள்தான்வீச சந்திப்பார்வீரமக்கள்
தாரைபூரிசின்னம் ஆரபாரமாய்முழங்க
தக்கையுடுக்கைகளும் தவிலோடுபம்பைகளும்
மிக்கதவுண்டைகளும் மிருதங்கந்தான்முழங்க
நன்குமதியுஞ்சுதியும் நன்ருகவூதிவர
தம்புருவீணை தக்கபடிவாசிக்க
பம்பையடித்துவரப் பரமேளந்தானதிர
கெண்செண்டுவாத்தியமும் கிளாரிநெட்வாத்தியமும்
கொடிவாத்தியமும்புதிதாய்க்கொண்டு வந்தாருன்மக்கள்
இத்தனைவாத்தியங்கள் இசைக்கின்ருர்பாருமம்மா
பார்த்துக்குளிருமம்மா பாங்கானவுன்மனது
கண்டுகுளிருமம்மா கல்லானவுன்மனது
எப்படியாகிலுந்தா னேழைகளுமீடேற
கண்பாருமம்மா காரணசவுந்தரியே
இந்திரனுக்கொப்பா யிலங்குமகமாரியரே

கும்பத்தழகியம்மா கொலுமுகத்துராஜகன்னி
சகலகுற்றம்சகலபிழை தாயாரேநீபொறுப்பாய்
வணங்குகின்றமக்களுக்கு வாழ்வுமிகவளிப்பாய்
ஓங்காரரூபியென்று உன்னையேதோத்தரிக்க
படவேட்டில்வீற்றிருக்கும் பரஞ்சோதித்தாயாரே
ஆரறிவாருன்மகிமை ஆணிமுத்துத்தாயாரே
அண்டபுவனமெல்லாம் அம்மாவுன்னைத் தொழுவார்
தேசங்களெங்குந்தேவியைத் தோத்திரிப்பார்
எள்ளுக்குளெண்ணெயைப்போ லெங்குநிறைந்தசக்தி
எங்கும்நிறைந்தவளே எல்லோர்க்குந்தாயாரே
அஞ்சலென்றவஸ்தமொடு அடியார்தமைக்காக்க
வேப்பிலையுங்கையில் விபூதியெங்குந்துளிதழும்
கருணைகடாக்ஷம்வைத்துக் காக்குமகமாயியுந்தன்
சரணாரதவிந்தமதைத் தந்தருளுமாரிமுத்தே
உன்பேர்நினைத்தால் பில்லிபிசாசுபறந்தோடுமம்மா
சூனியமும்வெஞ்சனமும் சுழன்றலைந்தோடிவிடும்
பாதாளவஞ்சனமும் பறந்துவிடுமுன்பேர்நினைத்தால்
கரகத்தில்வீற்றிருக்கும் கன்னனூர்மாரிமுத்தே
சத்தகன்னிமாதாவே சங்கரிமனோன்மணியே
சூலங்கபாலமுடன் துய்யநடமாகும்
ஓங்காரரூபமம்மா ஒருவரறிவாரோ
மகிமையறிவாரோ மானிடர்கள்யாவருந்தான்
அடியார்தமைக்காக்கும் மந்திரிநிரந்தரியே
அடியார்கள்செய்தபிழை ஆச்சியரே நீபொறுப்பாய்
கோயிலடிமையம்மா கொண்டாடும்பாலகன்றன்
சன்னதிபிள்ளையைத்தான் தற்காரும் பெற்றவளே
உன்னையல்லால்வேறுதுணை ஒருவரையும்காணேனம்மா
வருந்துவார்பங்கில் வளமாய்க்குடியிருப்பாய்
பாவாடைக்காரி பராபரியே அங்குகண்ணே
உண்ணுகின்றதேவதைக ளுடுத்துகின்றதேவதைகள்
கட்டுப்பட்டதேவதைகள் கார்க்கின்றதேவதைகள்
இந்தமனையிடத்திலிருந் துண்ணும்தேவதைகள்
சாம்பிராணிதூபத்திற்கு உட்பட்டதேவதைகள்
அனைவோரும்வந்திருந்து அடியாரைக்காக்கவேணும்
ஓராம்படித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்
ஓலைப்பூமண்டபத்தில் முந்திக்கொலுவிருந்தாய்
இரண்டாம்படித்தளமாம் இரத்தினசிம்மாசனமாம்

இரத்தினசிம்மாசனத்தி லிருந்தரசுதான் புரிவாள்
மூன்றும்படித்தளமாம் முனைமுகப்பூச்சாலைகளாம்
முனைமுகப்பூச்சாலைகளில் முந்திக்கொலுவிருந்தாள்
நான்காம்படித்தளமாம் நவரத்னமண்டபமாம்
நவரத்தினமண்டபத்தில் நாயகியும்வந்தமர்ந்தாள்
ஐந்தாம்படித்தளமாம் அழுந்தியசிம்மாசனமாம்
அழுந்தியசிம்மாசனத்தில் ஆயிகொலுவிருந்தாய்
ஆறும்படித்தளமாம் அலங்காரச்சாவடியாம்
அலங்காரச்சாவடியில் ஆச்சியரும்வந்திருந்தாய்
ஏழாம்படித்தளமாம் எழுதியசிம்மாதனமாம்
எழுதியசிம்மாதனத்தி லீஸ்வரியாள் கொலுவிருந்தாள்
எட்டாம்படித்தளமாம் விஸ்தாரமேடைகளாம்
விஸ்தாரமேடையதில் விமலியரும்வந்தடைந்தாள்
ஒன்பதாம்படித்தளமாம் ஒருமுகமாய்நின்றசக்தி
ஒருமுகமாய்நின்றசக்தி உத்தமியுங்கொலுவிருந்தாள்
பத்தாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
பளிங்குமாமண்டபத்தில் பத்தினிகொலுவிருந்தாள்
ஆத்தாள்கொலுவிலேதா ஞுற்கொலுவிருந்தார்
ஐங்கரனுமல்லபையும் அன்பாய்க்கொலுவிருந்தார்
தொந்திவயிற்றோனுந் துந்துபியுங்கொலுவிருந்தார்
குழந்தைவடிவேலன் குமரேசர்தானிருந்தார்
தோகைமயிலேறும் சுப்பிரமணியர்கொலுவிருந்தார்
சிங்கவாகனமேறுந் தேவிகொலுவிருந்தார்
ஊர்காக்குங்காளி உத்தமியாள்கொலுவிருந்தார்
துர்க்கையொடுகாளி தொடர்ந்துகொலுவிருந்தார்
வள்ளிதெய்வானையுடன் மகிழ்ந்துகொலுவிருந்தாள்
பச்சைமலைநாயகியாள் பைங்கிளியாள்தானிருந்தாள்
பூவைக்குறத்தியரும் பொருந்திக்கொலுவிருந்தார்
வாழ்முனியும்செம்முனியும் வந்துகொலுவிருந்தார்
காத்தான்கருப்பனொடு கட்டழகர்வீற்றிருந்தார்
தொட்டியத்துச்சின்னனும் துரைமகனும்தாமிருந்தார்
மருமகக்ளெல்லோரும் மகிழ்ந்துகொலுவிருந்தார்
குமாரர்களெல்லோரும் கூடிக்கொலுவிருந்தார்
ஆரியமாலையுட னனைவரும்வீற்றிருந்தார்
ஆயரின்பெருமா னனந்தாயன்னென்னும்
மாயன்பெருமாள் மங்கைமணவாளன்

ஐவரையுங்காத்த ஆதிநெடுமாலும்
பஞ்சவரைக்காத்த பாரளந்தோன் தாமிருந்தார்
கொற்றவரைக்காத்த கோபாலர்தாமிருந்தார்
முட்டையிற்குஞ்சு முகமறியாபாலகரை
பிட்டுவளர்த்தெடுத்த பெருமாள்கொலுவிருந்தார்
செட்டையிற்காத்த ஜெயராமர்சீதையரும்
அலமேலுமங்கையம்மா ஸ்ரீராமர்சீதையரும்
மங்கையொடுலட்சுமியு மகிழ்ந்துகொலுவிருந்தாள்
சீதேவிமூதேவி சேர்ந்துகொலுவிருந்தாள்
பாஞ்சாலனெக்கியத்தில் பதுமைபோல்வந்துதித்து
பத்தினியாள்துரோபதையும் பாரக்கொலுவிருந்தாள்
தளராதனஞ்செயரும் தருமர்கொலுவிருந்தார்
வாயுதேவன்புத்திரனுர் மதவீமன்தாமிருந்தார்
தேவேந்திரன்புத்திரனுர் தேர்விஜயன் தாமிருந்தார்
நகுலர்சகாதேவர் நலமாய்க்கொலுவிருந்தார்
கானக்குயிலழகர் கட்டழகர்வீற்றிருந்தார்
ஐவர்களுங்கூடி அன்பாய்க் கொலுவிருந்தார்
பட்டத்தரசி பைங்கிளிசுபத்திரையும்
ஆயன்சகோ தரியாளாரணங்குவீற்றிருந்தாள்
நல்லதங்காள்வீரதங்காள் நல்லசங்கோதியம்மாள்
அந்தமுள்ளசுந்தரியா ளாரணங்குவீற்றிருந்தாள்
மலையனூர்தானமர்ந்த மாரிகொலுவிருந்தாள்
கைச்சூலங்கப்பரையுங் கையிற்கபாலமுடன்
பச்செலும்புதின்றவளே சுடலைவனங்காத்தவளே
சுட்டெலும்புதின்றவளே சுடலைவனங்காத்தவளே
அக்காளுந்தங்கையரும் ஐந்திரண்டேழுபேரும்
ஐந்திரண்டேழுபேரும் அங்கேகொலுவிருந்தார்
தங்காதுபேய்பில்லி தன்பேரைச்சொன்னவுடன்
அங்காளஈஸ்வரியும் அமர்ந்துகொலுவிருந்தாள்
தொல்லைவினைநீக்கிச் சுகுணமனதையளிக்கும்
எல்லைபிடாரியரும் இங்கேகொலுவிருந்தார்
காவலர்கள்தான்புகழக் கனகசிம்மாதனத்தில்
காவலதிகாரி கட்டழகிவீற்றிருந்தாள்
இந்தமனைமுதலா யேழுமனையுங்காவல்
சந்ததமுன்காவல் சாதுகுணமாரியரே
காவல்பதனமம்மா கட்டழகிமாரியரே
காவலுக்குள்ளே களவுவரப்போகுதம்மா

பாராசலிக்கிட்டுப் பத்திரமாய்க்காருமம்மா
தீராதவினைகளைத்தான் தீர்க்கும்பராபரியே
தாழும்பதிகளைத்தான் தற்காத்திரற்சியம்மா
ஏழுபிடாரியும் இசைந்துகொலுவிருந்தார்
முத்தாலுராவுத்தன் முனையிலுள்ளசேவகனும்
முற்றத்தில்வந்து முனைந்துகொலுவிருந்தார்
பூவாடைகொங்கையென்று பூரித்துக்காத்திருக்கும்
பாவாடைராயனும் பக்கங்கொலுவிருந்தார்
தாட்சியில்லாதசிவ சங்கரியாளென்றும்சொல்லும்
ஆட்சியுடன்கொலுவில் அமர்ந்துகொலுவிருந்தார்
தேவிதிருக்கொலுவில் அமர்ந்துகொலுவிருந்தார்
ஆயிதிருக்கொலுவில் அமர்ந்தாரனைவோரும்
மாரிகொலுவில் மனமகிழ்ச்சியாயிருந்தார்
வீரிக்கொலுவில் வீற்றிருந்தாரெல்லோரும்
ஆலித்துதானிருந்தார் அம்மைதிருக்கொலுவில்
பாலித்துதானிருந்தார் பராபரியாள்தன்கொலுவில்
கூடிக்கொலுவிருந்தார் கொம்பனையாள்தன்கொலுவில்
நாடிக்கொலுவிருந்தார் கொம்பனையாள் தன்கொலுவில்
நாடிக்கொலுவிருந்தார் நாரணியாள்தன்கொலுவில்
சந்தேகம்போக்கிச் சாயுச்சியமடைய
சந்தோஷமாகத் தாமிருந்தாரெல்லோரும்
நாடுதழைக்கவம்மா நல்லோர்மிகவாழி
மாடுதழைக்கவம்மா மாநிலத்தோர்மிகவாழி
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும்மங்கையரும்
ஆரியருமற்றோரும் யாவர்களுந்தான்படிக்க
முன்னாளில்மூத்தோர் மொழிந்தமாரித்தாலாட்டை
இந்நாளிற்போற்ற எழுதாவெழுத்ததனுல்
அச்சுக்கூடத்ததிபர் அநேகரிதுவரையில்
உச்சிதமாய்ச்சிலிகை யோங்கிப்பதிபபித்தார்
கற்றோருமற்றோருங் களிப்பாய்ப்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
பாரிலுள்ளோரிக்கதையைப் படித்துத்தொழுதேற்ற
கற்றவருமற்றவரும் களிப்படையவாழி
வாழிமிகவாழி வானவர்கள்தான்வாழி
சங்கரனுஞ்சங்கரியும் அறுமுகனுந்தான்வாழி
செங்கண்மால்ஸ்ரீராமர் சீதையருந்தான்வாழி
பஞ்சவர்களைவரும் பைங்கிளியாள் துரோபதையும்

அல்லிசுபத்திரையும் அனைவோருந்தான்வாழி
முப்பத்துமுக்கோடி தேவர்களுந்தான்வாழி
சொற்பெரியசோம சூரியாக்கினிவாழி
நாற்பத்தெண்ணுயிரம் நன்முனிவர்தான்வாழி
காக்குங்கருடசித்தர் வித்தியாதரர்வாழி
சந்திரனுஞ்சூரியனுந் தானவர்கள்தான்வாழி
இந்திரனுந்தேவர்களும் எல்லோருந்தான்வாழி
கற்பகக்காவும் காமதேனுவும்வாழி
பற்பலதீவும் பஞ்சாக்ஷரம்வாழி
காத்தானெடுவீரன் கறுப்பன்மிகவாழி
சங்கிலிகறுப்பன் சப்பாணிதான்வாழி
மானிடனுடருளன் வடுகனுந்தான்வாழி
பாவாடைராயன் பலதேவரும்வாழி
இக்கதைகேட்டோர் என்னாளுந்தான்வாழி
பெருமையுடன்கேட்கும் பெரியோர்மிகவாழி
ஊரெங்குங்கீர்த்திபெற்ற உத்தமருந்தான்வாழி
மாரியம்மன் புகழ் நூல்களைமுறையாகவெளியிடும்
சீரியகலைமகள் புத்தகசாலை சிறந்துவாழி
பாருலகிலிக்கதையைப் படித்தோர்மிகவாழி
நாரணியாள் தன்கதையை நாள்தோறும் வாசிப்போர்
பாரினில்புத்திர பாக்கியம்படைத்துமிக வாழ்வாரே
மாரிதிருக்கதையை மகிழ்ந்துமேகேட்டோரும்
தேவிதிருக்கதையைத் தீர்க்கமாய்கேட்டோரும்
பாடிப்படித்தோரும் பாக்கியத்தைத் தானடைவார்
நாடித் துதிப்போரும் நற்கதியைத் தானடைவார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பார்.

**மங்களம்!**

**மாரியம்மன் தாலாட்டு முற்றிற்று.**

# உமையம்மை வழிபாடு

## 1. நூற்றெட்டுப் போற்றி

திருச்சிற்றம்பலம்

[நிலைமண்டில ஆசிரியப்பா]

திருநிலை நாயகி தேவி போற்றி
கருந்தார்க் குழலுமை கௌரி போற்றி
மங்கள நாயகி மாமணி போற்றி
எங்கும் நிறைந்த இன்பொருள் போற்றி
இளமை நாயகி எந்தாய் போற்றி

வளமை நல்கும் வல்லியே போற்றி
யாழைப் போல்மொழி யாயே போற்றி
பேழை வயிற்றனைப் பெற்றோய் போற்றி
பால்வளை நாயகி பார்ப்பதி போற்றி
சூல்கொண் டுலகெலாம் தோற்றினாய் போற்றி

அறம்வளர் நாயகி அம்மே போற்றி
மறங்[1]கடி கடைக்கண் மனோன்மணி போற்றி
போகம் ஆர்த்த பொற்கொடி போற்றி
பாகம் பிரியாப் பராபரை போற்றி
உலகுயிர் வளர்க்கும் ஒருத்தி போற்றி

மலர்தல் குவிதலில் மணமலர் போற்றி
கத்து கடல்வரா முத்தே போற்றி
நத்தும் அடியார் நட்பே போற்றி
கற்றவர்க் கின்பக் கடலே போற்றி
மற்றவர்க் கெட்டா வான்வெளி போற்றி

சிவகாமி யம்மைச் செல்வி போற்றி
புவனப் பொருள்களிற் பொருந்தினாய் போற்றி
வனிதா யத்தமர் வண்தாய் போற்றி
கலிசூ ழாவகை காப்பாய் போற்றி
வண்டுவார் குழலி மாதா போற்றி

செண்டா டும்விடைச் சிவையே போற்றி
உண்ணா முலையெம் உயர்தாய் போற்றி
கண்ணார் கமுகுக் கழுத்தாய் போற்றி
பெருந்துறை அரசி பெண்கனி போற்றி
முருந்தேர் முறுவல் முதல்வி போற்றி

வேற்கண் அம்மை மீன்கணி போற்றி
நாற்பெரும் பயன்தரும் நங்காய் போற்றி
மின்னொளி யம்மையாம் விளக்கே போற்றி
மன்னொளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
பச்சை நிறத்துப் பைங்கிளி போற்றி

இச்சைக் கிசைந்த இன்பே போற்றி
குவளைக் கண்மலர்க் கொம்பே போற்றி
தவளவெண் நீற்றோன் தலைவி போற்றி
பவள வரைமேற் பசுங்கொடி போற்றி
துவளிடை சிறுத்த தூயோய் போற்றி

குயில்மொழி மிழற்றும் மயிலியல் போற்றி
எயில்மூன் றெரித்த இலங்கிழை போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
வையமீன் றளிக்கும் வளத்தாய் போற்றி
மெய்யுரு கடியர் விருப்பே போற்றி

ஆவுடை நாயகி அன்னாய் போற்றி
தேவிற் சிறந்த திருமகள் போற்றி
தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
அண்டர் அருந்தா அமிழ்தே போற்றி
பனங்காட் டூருறை பவளே போற்றி

அனங்காட் டும்நடை அழகி போற்றி
தமிழினும் இனிமை சார்ந்தோய் போற்றி
குமிழ்தா மரைமலர் கொடியிடை போற்றி
அமரி குமரி ஆனாய் போற்றி
இமவான் பெற்ற இளையாய் போற்றி

மலையத் துவசன் மகளே போற்றி
கலையாய்க் கனிந்த தலைமகள் போற்றி
தக்கன் மகளாய்த் தனித்தாய் போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி
அலைமகள் அடிபணி நலமகள் போற்றி

கலைமகள் தலைபணி கருத்தே போற்றி
திருவார் கூடலில் திகழ்வாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி
உயிருள் ஓவிய உருவே போற்றி
செயிரில் காட்சிச் சேயிழை போற்றி

செந்தமிழ்ப் பாவின் தெளிவே போற்றி
எந்தம் மனத்தில் இருப்பாய் போற்றி
நீலி சூலி நெடுங்கணி போற்றி
மேலை வினைகடி விமலை போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி

வெளிக்குள் வெளியாய் மிளிர்வாய் போற்றி
நீல மேனி வாலிழை போற்றி
கோலக் கொண்டல் நிறத்தாய் போற்றி
மண்முதல் ஐம்பொருள் வளனே போற்றி
பெண்ஆண் அலியுருப் பெற்றோய் போற்றி

ஆப்பனூர் மேவிய ஆத்தாள் போற்றி
மூப்பிறப் பற்ற முதல்வி போற்றி
எண்குணத் தொருவன் இடத்தோய் போற்றி
பண்கனி மென்சொற் பாவாய் போற்றி
பச்சிளம் பெண்ணாய்ப் பகர்வோய் போற்றி

எச்சம யத்தும் இசைந்தாய் போற்றி
யாழிசைப் பண்ணா யமர்ந்தாய் போற்றி
ஏழிசைப் பயனாய் இருந்தாய் போற்றி
அருள்மலி கண்ணுடை ஆயே போற்றி
மருளினர் காணா வான்பொருள் போற்றி

வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை போற்றி
பற்றிலா நற்றவர் பற்றே போற்றி
இழையாய் நன்மை இழைப்பாய் போற்றி
குழையாய் அகத்தைக் குழைப்பாய் போற்றி
திருநணு மங்கைச் செல்வி போற்றி

உருவும் திருவும் உடையாய் போற்றி
அருந்தவர்க் குதவும் அருளே போற்றி
அருந்துறைத் தமிழின் அமைபொருள் போற்றி
கருநிற ஒளிவளர் கடலே போற்றி
பருவரை மருந்தே பகவதி போற்றி

சூளா மணியே சுடரொளி போற்றி
ஆளாம் அடியர்க் கருள்வாய் போற்றி
மதுரை அரசியாய் வந்தோய் போற்றி
குதிரைச் சேவகன் கொண்டோய் போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி

பலநல் லனநீ படைத்தருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
பயிர்கள் பயன்தரப் பரிந்தருள் போற்றி
செல்வம் கல்விச் சிறப்பருள் போற்றி

நல்லன் பொழுக்கம் நல்குவாய் போற்றி
போற்றிஉன் பொன்னடிப் போது போற்றி
போற்றி புகழ்நிறை திருத்தாள் போற்றி
போற்றிதா யுமையே போற்றி போற்றியே.

திருச்சிற்றம்பலம்.

# 2. புகழ்ப் பாக்கள்

ஒன்றாகி ஐந்தொழிற்கும் ஐந்துவிதம் உற்றுயிருள்
நின்றான் பொற் பாதம் நினை. (1)

— சைவசமயநெறி

பெற்றானைச் சிற்றுயிரைப் பேருயிருள் நீங்காளைப்
பொற்றாளிற் சூட்டுவம்நாட் போது, (2)

— இறைவன் நூற்பயன்

மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நரகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம் (3)

— பதிபசுபாச விளக்கம்.

ஈசனருள் இச்சையறி வியற்றல் இன்பம்
இலயமொடு போகமதி காரம் ஆகித்
தேசருவம் அருவுருவம் உருவம் ஆகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வம் ஆகிப்
பேசரிய உயிரையெலாம் பெற்றுநோக்கிப்
பெரும்போகம் அவையளித்துப் பிறப்பு மாற்றி
ஆசகலும் அடியருளத் தப்பன் தன்னோ
டமர்ந்திருக்கும் அன்னையடி சென்னி வைப்பாம் (4)

— சிவஞானசித்தியார்.

உருகி உருகி நெக்கு நெக்குள்
உடைந்து கசிந்திட் டசும்பூறும்
உழுவ லன்பிற் பழவடியார்
உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப்
பெருகு பரமா னந்தவெள்ளப்
பெருக்கே சிறியேம் பெற்றபெரும்
பேறே ஊறும் நறைக்கூந்தல்
பிடியே கொடிநுண் நுசுப்பொசிய
வருகுங் குமக்குன் றிரண்டேந்தும்
மலர்ப்பூங் கொம்பே தீங்குழலின்
மதுரங் கனிந்த பசுங்குதலை
மழலை அரும்பச் சேதாம்பல்
முருகு விரியும் செங்கனிவாய்
முத்தம் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
முலையாய் முத்தந் தருகவே. (5)

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (6)

— மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

அயில்கண் தனையஞ் சலித்தேத்தும்
அன்னை வருக பெருங்கருணை
ஆழி வருக தீவினையேம்
ஆவித் துணையே வருகவிடம்
துயில்கண் டனையம் பலத்தாட்டும்
சுடர்பொற் கொடியே வருகஇளஞ்
சுகமே வருக நறுங்குதலை
தோற்றுங் கிளவி எனுமதுரம்
பயில்கண் டனையர் செவிக்கூட்டும்
பசுங்கோ கிலமே வருகஎன்றும்
பருகத் தெவிட்டாச் சுவையமுதப்
பாவாய் வருக பசுந்தோகை
மயில்கண் டனைய இளஞ்சாயல்
மாதே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத
வல்லி வருக வருகவே (7)

— அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

செந்தா மரைமெல் இதழ்மருட்டித்
தேமா நறுந்தண் தளிர்வருத்திச்
செயலை மலர்நல் நலங்கவற்றிச்
செம்பஞ் சினையும் விளரியற்றி
அந்தார் புனையும் உழுவலன்பர்க்
கழியா இன்பம் அளித்துமணை
அம்மி இடத்தும் பயின் றதனல்
அடியேன் மனத்திற் குடியிருந்த
பைந்தாள் பெயர்த்து மேகலையும்
பாத சாலங் களும்ஒலிப்பப்
பவள வாய்ப்புன் னகையரும்பப்
பயில்மா லையின்முன் றில்கள் தொறும்
மந்தா நிலஞ்சேர் தவத்துறையின்
வாழ்வே வருக வருகவே
வான்தோய் குடுமி வரைமுளைத்த
மருந்தே வருக வருகவே (8)

— பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழ்.

பொன்னே வருக மூவுலகும் பூத்தாய் வருக நாயேனைப்
புரந்தாய் வருக வழுதியர்கோன் புதல்வீ வருக முகிற்கிளைய
மின்னே வருக மெய்ஞ்ஞான விளக்கே வருக மறைநான்கின்
விரிவே வருக பேரின்ப விளைவே வருக மிகுங்கருணை
அன்னே வருக அகநெகுவார்க் கணியே வருக அலர்மடவார்க்
கரசே வருக உரைப்பருஞ்சீர் அம்மே வருக அழற்கரத்து
மன்னேர் உடலம் பகிர்ந்தஇள மயிலே வருக வருகவே
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே. (9)

— திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.

அறையும் நிறையும் நதியும் மதியும் அரவும் விரவு மத்தமும்
அலரும் இதழி மலரும் முடியில் அணியும் இறையிடத்துமா
மறையின் முடியும் நசையும் முனிவும் மயலும் நனிசெழித்துற
வளரும் இழிவு மலியென் உளமும் மருவி உறையும் உத்தமி
நறையும் மதுவும் உறுநன் மலரின் நனிசெய் அடியருச்சனை
நவிலும் இனிய துதியுள் உருகு நலமும் ஒருவிப் பத்தியே
நிறையும் அடியர் பிறவி களைய நினைவள் தருக முத்தமே
நிலவு புரிசை யுலவும் அளகை நிமலி தருக முத்தமே (10)

திருவே வருக தெவிட்டாத தேனே வருக இன்ன முதத்
தெளிவே வருக பேரின்பச் செறிவே வருக ஏர்சுமந்த
உருவே வருக பரஞான ஒளியே வருக அருமறையின்
உவப்பே வருக அனைத்துயிர்க்கும் உயிரே வருக கதியளிக்கும்
தருவே வருக உலகீன்ற தாயே வருக நாயேற்குத்
தஞ்சே வருக பரனணியும் தாரே வருக கார்இவரும்
மருவேய் பொழில்சூழ் எழில் அளகை வாழ்வே வருக வருகவே
வானோர் தெய்வ மாதர்சிகா மணியே வருக வருகவே. (11)

— அளகாபுரி உமையம்மை பிள்ளைத்தமிழ்

வாரா திருந்தால் இனிநானுன்
வடிவேல் விழிக்கு மையெழுதேன்
மதிவாள் நுதற்குத் திலகம்இடேன்
மணியால் இழைத்த பணிபுனையேன்
பேராதரத்தி னொடுபழக்கம்
பேசேன் சிறிதும் முகம்பாரேன்
பிறங்கு முலைப்பால் இனிதூட்டேன்
பிரிய முடனுக் கலைவைத்துத்
தேரார் வீதி வளங்காட்டேன்
செய்ய கனிவாய் முத்தமிடேன்
திகழும் மணித்தொட்டிலில் ஏற்றித்
திருக்கண் வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில்
தவழும் குழந்தாய் வருகவே
சாலிப் பதிவாழ் காந்திமதித்
தாயே வருக வருகவே. (12)

— நெல்லைக் காந்திமதி பிள்ளைத்தமிழ்.

ஈரப் பிறைவாழ் நுதற்கனியே
இனிய சுவையற் புதக்கனியே
எண்ணெண் கலையும் உடையவளே
இருநால் திசையும் உடையவளே
பாரக் கதிர்வேல் படைஅனமே
பதுமா சனத்தின் புடைஅனமே
பைய நடந்து வரும்பிடியே
பரவார் சுழல வரும்பிடியே

காரில் பிறழும் குழலாளே
கருப்பம் புகுந்தங் குழலாளே
கையால் தொழுவார் மருங்கணியே
காத்தாண் டருள மருங்கணியே
தாரப் பொருப்பார் விருப்பமுறும்
தனத்தாய் முத்தந் தருகவே
தமிழ்த் தென் குலசை அறம்வளர்த்த
தாயே முத்தந் தருகவே. (13)

— அறம் வளர்த்த நாயகி பிள்ளைத்தமிழ்,

செய்ய பவளச் செழுங்கொத்தே முத்தே சீவ ரத்தினமே
சிந்தா மணியே மரகதமே திகழும் வைடூ ரியமணியே
துய்ய பதும ராகமே சுடர்விட் டொளிர்கோ மேதகமே
சோதி வைர மேநீலச் சுடர்விட் டெறிக்கும் இள மணியே
சைவ மணியே பெண்மணியே தயங்கும் இனிய பொன் மணியே
தாயே வருக வருகஎன்றால் சதங்கை சிலம்பப் புலம்புமென்முன்
பைய நடந்து வராதபரா முகமேன் வருக வருகவே
பாகம் பிரியாள் சங்கரனார் பாகம் பிரியாள் வருகவே. (14)

— திருமந்திரநகர் பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ்,

ஆறாத் துயர்கொண் டடியேன் சலிப்ப அது செவியில்
ஏறும லேயிருந் தாலென்செய் வேனெங்கள் ஈசற்கொரு
கூறாகி அண்ட முதலாய் இளமை குலவுதவப்
பேறாகி வாழ்பவ ளேகுன்றை வாழும் பெரியம்மையே. (15)

— பெரியநாயகியம்மை கலித்துறை.

பொன்னே நவமணி யேயமு தேபுவி பூத்தடங்கா
மின்னே அளிவைத்த மெய்ப்பொரு ளேகப்பு வேலையென்பால்
எந்நேரம் காலன் விடுத்தாலும் நீஇனிக் கையமர்த்தி
அந்நேரம் வந்தளிப் பாய்மது ராபுரி அம்பிகையே. (16)

— அம்பிகைமாலை.

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரும் மேனிக் கருங்குயிலே—ஆராயும்
வேதமுதல் ஆகிநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
ஆதி பராபரையே அம்பிகையே—சோதியே
அண்டரெல்லாம் போற்றும் அரும்பொருளே ஆரணங்கே
எண்டிசைக்கும் தாயான ஈச்சுவரியே—தெண்திரையில்
வந்தஅமு தேயென்று மாறும லேநினைப்பார்
சிந்தைதனி லேஉறையும் செல்வியே........ (17)

— மீனாட்சியம்மை கலிவெண்பா,

உலையிலிடு மெழுகதுபோல் உருகிமனம் வெறுங்கூடாய்
உலர்ந்து வாடி
நிலைகுலைந்து மதிமயங்கி நின்றுமிகப் பரதவித்தல்
நீதி யோசொல்
கலைமகளே வடிவணங்கே கமலமுகத் திருமாதே
கருணை யாளே
மலைமகளே அறந்தழைக்கும் சொக்கர்பங்கில் மீனாட்சி
மதுரைத் தாயே. (18)

— மீனாட்சியம்மை தோத்திரம்

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்த வேநிற்பாய் (19)
துண்ணென் துடியொடு துஞ்சூர் எறிதரு
கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்
விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய். (20)

— சிலப்பதிகாரம், வேட்டுவவரி: 9; 2I.

செய்யதிரு மேனிஒரு பாதிகரி தாகத்
தெய்வமுதல் நாயகனை எய்தசிலை மாரன்
கையின்மலர் பாதமலர் மீதுமணு காமல்
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம்.

— கலிங்கத்துப்பரணி : 15

பதிஉண்டு நிதிஉண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனும் திமிரமணுகாக்
கதிஉண்டு ஞானமாம் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளும்உண்டு
கறைஉண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன்றும் உண்டாகுமேல்
நதிஉண்ட கடலெனச் சமயத்தை உண்டபர
ஞானஆனந்தஒளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனும் அகந்தை தீர்த்தென்
மதிஉண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூ தனன் தங்கையே]
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே (22)

காற்றைப் பிடித்துமட் கரகத் தடைத்தபடி
கன்மப் புன ற்குளூறும்
கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மட்கலக்
காயத்துள் எனையிருத்திச்
சோற்றைச் சுமத்தி நீ பந்தித்து வைக்கத்
துருத்திக்குள் மதுஎன்னவே
துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேன் அருள்
தோயநீ பாய்ச்சல்செய்து
நாற்றைப் பதித்ததென ஞானமாம் பயிரதனை
நாட்டிப் புலப்பட்டியும்
நமனென தீப்பூடும் அணுகாமல் முன் நின்று
நாடுசிவ போகமான
பேற்றைப் பகுத்தருளி எனையாள வல்லையோ.
பெரியஅகி லாண்டகோடி
பெற்றநா யகி பெரிய கபிலைமா நகர்மருவு
பெரியநா யகியம்மையே. (23)

— தாயுமானசுவாமிகள் பாடல்;

கண்ணேயக் கண்ணின் மணியே மணியிற் கலந்தொளிசெய்
விண்ணே வியனெற்றி யூரண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே மலைபெறும் பெண்மணியே தெய்வப்பெண்ணமுதே
மண்ணேயம் நீத்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 24

— திருவருட்பா

வானுற்ற மழைமொக்குள் நிகர்செல்வம் நிலையென
மகிழ்ந்துறையும் மூடர் முன்போய்
வாய்திறந் தெண்ணென்கு பல்லையும் காட்டியே
மாரனி சூரன் என்றே
தானுற் றெடுத்தெடுத் தொருகோடி வாசகம்
சாற்றமுக நோக்கிடாது
சப்பாணியோ நொண்டி ஊமையோ செவிடனோ
தருமந்த காசன் இவனோ
கானுற்ற மிருகமோ உயிரிலாத் தேகமோ
காணுமிது என்கொல் என்றே
கருதிட மதத்தினுறை சிறுபேதை தங்களைக்
கண்டுதுதி செய்திடாமல்
ஆவிற் சிறப்புற தேனுவின் கன்றென்ன
அமலசுக மேவி வாழ
அருட்கடை செய்தாளுவாய் கேதாரகௌரிநின்
அடிபரவும் அடிமை என்றே 25

— காசி கேதாரகௌரி திருவருட்பா.

நீர்கொண்ட கடலாடை உலகமதில் நல்லறிஞர்
நேசிக்க உயர்கல்வியும்
நீங்காத வளமைபெறு பாங்கான செல்வமும்
நின்னடியர் பக்கலென்றும்
ஏர்கொண்ட நிறையன்பும் மேதக்க ஒண்கொடையும்
யாவரும் துதிசெய்குணமும்
எங்கும் நிறை கீர்த்தியும் மேன்மேலும் ஓங்கிட
ஈந்தருளி எனை ஆள்கவே
கார்கொண்ட விண்டலைத் தவழ்மதிக் குழவியின்
கருங்கோடு சென்று பீறக்
கவையுலவை மஞ்சரி முகைமுறுக் கவிழ்ந்துமது
கடைமடை திறந்துபாயச்
சீர்கொண்ட செந்நெலம் மதிக்குழவி உதவியைச்
சென்றீதல் மானவளரும்
தென்புதுவை நகரினுறை சிவகாம வல்லியே
தேசோம யானந்தியே. 26

— சிவகாமியம்மை பஞ்சரத்தினம்.

இல்லாமை என்னுமொரு பொல்லாத பாவியால்
எந்நேரம் இடருருமல்
ஏற்காமல் ஏற்பவர்க் கில்லையென் றுரையாமல்
இழிதொழில்கள் செய்திடாமல்
கல்லாத புல்லர்உற வில்லாமல் அடுபிணி
கனவிலும் என்னைத்தொ டாமல்
கற்றபெரி யோர்களோடு தர்க்கித் தெதிர்த்துக்
கடிந்தசொற் சொல்லி டாமல்
கொல்லாது கொல்லுமட மங்கையர்கள் இங்கிதக்
கொங்கையின் மயங்கி டாமல்
குறையொன்றும் இல்லாமல் உனதடிமை செய்யவருள்
கூட்டுவாய் மதவே ளைமுன்
வெல்லாமை வென்றவன் இடத்தில்வளர் அமுதமே
விரிபொழில் திருமயி லைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப் பதவல்லி
விமலிகற் பகவல்லியே. 27

— கற்பகவல்லியம்மை பதிகம்.

கரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியரக்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்க ணம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி. 28

— திருவிளையாடற் புராணம்.

பொங்குருச் செல்வம் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருளவல்ல இணையிலா எம்பிராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை அடிக்கமலங்கள் போற்றி. 29

— வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம்.

செறிதரும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவறும் அரனிடம் மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம். 30

— கந்த புராணம்.

ஊடலின் உடைந்த சங்கம் ஒளிர்சடைப் பிறைவெண் கீற்றின்
மாடுறப் பொருந்தும் போழ்து மகிழ்நருட் குறித்து நோக்க
ஏடுறு தளவப்போதின் இளநிலா முறுவல் பூத்துப்
பீடுறு மதியிற் செய்த பெண்ணடி வணக்கம் செய்வாம். 31

— திருச்செந்தூர்ப் புராணம்.

இமையவரைக் குலக்கொழுந்து கயிலைவரை
மேருவரைக் கிறைவி வேதச்
சிமையவரைத் திரிகூடச் சிவக்கொழுந்து
மணக்குமொரு செழும்பூங் கொம்பு
கமையவரைப் புரக்க அருட் கடல்சுரந்து
மடைதிறந்த கண்ணுள் என்னும்
சமையவரைத் தலைவிகுழல் வாய்மொழியம்
பிகைதிருத்தாள் தலைமேற் கொள்வாம், 32

— திருக்குற்றாலப் புராணம்.

பணிப்புலம்

# முத்துமாரியம்மன்

# தோத்திரம்

---

காப்பு

வெண்பா

ஐங்கரனே சோதி அருள்விளக்கே ஆதிசிவ
சங்கரனார் அன்பில் தருமகனே — சிங்கமிசை
மேவுமுத்து [மாரித்தாய் மெய்ப்பதத்தை பாடுதற்கு
நாவிலருள் செய்வாய் நயந்து.

நூல்

1. நாயகியே நாதாந்த மணியே போற்றி
ஞானரசத் தேனூறும் கரும்பே போற்றி
ஆயகலை அருள் சுரக்கும் அன்னே போற்றி
அட்சரங்கள் அத்தனையு மானாய் போற்றி
மாயவினை தீர்த்தருளும் தாயே போற்றி
மன்னுபுவி காத்தமலை மகளே போற்றி
தூயபுகழ் விளங்குபணிப் புலத்து மேவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி

2. வல்லசுரர் குலமறுத்த மாதே போற்றி
மதுரையர சாண்டதடா தகையே போற்றி
நல்லியமக் கிரிவளர்பரர் வதியே போற்றி
ஞானகண பதியை நயந் தீன்றாய் போற்றி
வெல்லுவடி வேலவனைத் தந்தாய் போற்றி
வேணுகோ விந்தற்கிளை யாளே போற்றி
சொல்லுதமிழ் வளரும் பணிப் புலத்து மேவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி.

3. செங்கழுநீர் நிறமேனிச் செல்வி போற்றி
செஞ்சோதிக் கரகமிசை யிருப்பாய் போற்றி
அங்குசவாள் வேல்பாசப் படையாய் போற்றி
அனலுமிழும் முதிர் காந்தச் சடையாய் போற்றி
சிங்கத்தில் ஏறிவரும் தேவி போற்றி
சேணோங்கு கம்பதவம் புரிந்தாய் போற்றி
துங்கமிகு செல்வபணிப் புலத்து மேவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி

4. ஐந்தெழுத்தா யாடுகிற அணங்கே போற்றி
அண்டமெலாம் நிறைந்தகதிர் விளக்கே போற்றி
சிந்தனையும் திருவுருவு மானாய் போற்றி
சிகரத்தின் சுவைகாட்டும் தேனே போற்றி
மந்திரநான் மறைகாணு மாண்பே போற்றி
வாயுபுனல் மண்தேயு வானே போற்றி
சுந்தரம்சேர்ந் திலங்குபணிப் புலத்து மேவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி

5. செழுமைதரு கைலைவளர் சிவையே போற்றி
சிவஞானப் பாலளித்த உமையே போற்றி
எழுமைதரு பவமறுக்கும் இறைவி போற்றி
எருதேறும் ஈசனருட் டுணையே போற்றி
பழையதமிழ் வளர்த்தபரா பரையே போற்றி
பத்தியினோர்க் கினித்திடும்சர்க் கரையே போற்றி
தொழுமடியர்க் கருளும்பணிப் புலத்து மேவும்
சோதி முத்துமாரியம்மா போற்றி போற்றி

6. அரியயனும் பணிபுரியும் முதலே போற்றி
அடியவரின் மனத்திருக்கும் அம்மே போற்றி
எரியுமிழும் குண்டத்தில் எழுந்தாய் போற்றி
எத்திசையும் நிறைந்தகலை நிதியே போற்றி
வரிசிலைக்கைப் பொற்கலச முடையாய் போற்றி
வலிமை பெறு பூதகணப் படையாய் போற்றி
சொரிபழனம் பயிலும் பணிப் புலத்து மேவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி

7. இகமோடு பரசுகமும் தருவாய் போற்றி
எண்ணுன்காய் அறம் வளர்க்க வந்தாய் போற்றி
மிகுமாரி வளம்பொழிய வைத்தாய் போற்றி
வினைமாற வழிகாட்டும் மருந்தே போற்றி
புகுவேள்விக் களமழித்த புதல்வி போற்றி
பொலிநெல்லு படியிரண்டும் பகிர்ந்தாய் போற்றி
சுகமோங்கும் ஞானபணிப் புலத்து மேவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி

8. உத்தமியே ஸ்ரீஞானம் பிகையே போற்றி
ஓங்கார மங்கள நாயகியே போற்றி
நித்தியகல் யாணி நிரஞ்சனியே போற்றி
நெட்டரவ பூஷணியே உமையே போற்றி
முத்திதரும் ரட்சகி நான் முகியே போற்றி
முக்கண்ணி திரிபுரசுந் தரியே போற்றி
சுத்தசத்தி யாகிப்பணிப் புலத்து மேவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி

9. அரிமகிழும் சோதரிநா ரணியே போற்றி
அருமறைகள் தந்தபூ ரணியே போற்றி
வரிமயிலாய் வந்தசடேஸ் வரியே போற்றி
வலம்புரியாய் வந்தஅருட் கொழுந்தே போற்றி
பெரியநா யகிமனோன் மணியே போற்றி
பிரணவ சொரூபசியா மளையே போற்றி
துரிதநடம் புரிந்துபணிப் புலத்து மவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி

10. அன்பூறி அருள்பூத்த கனியே போற்றி
அறமூறிச் சிவம்பூத்த சுவையே போற்றி
என்பூறி இதம்பூத்த ஒளியே போற்றி
எழுத்தூறி எழில்பூத்த வடிவே போற்றி
இன்பூறிச் சிரம்பூத்த மலரே போற்றி
இசையூறி மதிபூத்த மதியே போற்றி
துன்பாறு தடுத்துபணிப் புலத்து மேவும்
சோதிமுத்து மாரியம்மா போற்றி போற்றி.

11. "[redacted]"

அருட்கவி சீ. விநாசித்தம்பி
அளவையூர் சிரஞ்சீவி.

1. முத்து மாரியை முப்புர நீறிய
அத்த னூர்க்கிட மானசிற் சத்தியை
நத்து நல்லிசை நல்குப ணிப்புல(ம்)
நித்த(ம்) நின்றருள் நிமலையைப் போற்றுவாம்.

2 *பணிப்பு லத்துறை பைந்தொடி யாரிறை
§பணிப்பு லத்தெழு பத்திமி குந்துபொற்
‡பணிப்பு லந்தரன் பாங்குறை மாரியின்
பணிப்பு ரந்திடப் பரிந்துகொ டுப்பரே.

3. நாம நான்மறை நவின்ற நற்பொருட்
பாம லர்கொடு பணியு மாண்பினர்
சேம மாயுறை செம்பணிப் புலந்தொழ
ஏம வாழ்வெலா மிம்ப ரெய்துமே.

4. முத்த ராய்மன மோன மெய்திய
பத்தர் மேவுநற் பணிப்பு லத்துறை
முத்து மாரிபொன் முளரி மென்பதஞ்
சித்த மிருத்துவார் சித்த ராவரே.

5. ஒத்த பணிப்புல மோம்பி யன்பினுற்
சித்தஞ் செழித்ததொர் பித்த ரிவரென
முத்து மாரியை முன்னு வார்நிதம்
அத்த னூர்கழ லடைந்து வாழ்வரே.

6. பாரியல் பந்தனுட் பட்டுப் பருவர லுறுவார் தம்மேற்
பாரிய கருணை பூத்துப் பரன்பணிப் புலத்த ராக்கிச்
சீரிய நெறியிற் சேர்த்துச் சிவநிதி யருளு முத்து
மாரியென்னை யம்பொன் மலரடி சென்னிவைப்பாம்.

---

* பணிப்புலமாகிய இடம்

‡ இறைபணிபுலத்து —இறைவன் பணிமனமாகிய புலத்தேயுண்பாக

§ பொற்பணிபுலந்து —பொன்னுபரணங்களை வெறுத்து

பண்டித சைவப்புலவர் இ. செல்லத்துரை

மற்
க்

ாம்.

பாக

ரை

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.